PARAPARAPPU CHEITHI
Tamil Fortnightly
# பரபரப்பு செய்தி
மாதமிருமுறை இதழ்
புலனாய்வு இதழ்களில் புதிய பரிணாமம்
Volume : 27 ● Issue : 10 ● 2025 August 16-31 ● மலர் - 27 ● இதழ் - 10 ● 2025 ஆகஸ்ட் 16-31 ● ₹15



## யாருக்கு சீட்டு..? யாருக்கு வேட்டு..?



# லட்சியக் கூட்டமா? ரசிகர் கூட்டமா!



சிதறுமா சீமானின் வாக்கு வங்கி?

அரசியல் | நமது புலனாய்வு குழு.

## கட்சி தாவும் பிரமுகர்கள்!

# அ.தி.மு.க.வாக மாறும் தி.மு.க!

**அ.தி.மு.க.விலிருந்து ஆளுங்கட்சியான திமுகவில் முக்கிய பிரமுகர்கள் பலர் இணைந்து வருகின்றனர். அந்தவகையில் அதிமுக மூத்த உறுப்பினர் அன்வர் ராஜா திமுகவில் இணைந்து விட்டார். அவருக்கு உடனடியாக திமுகவில் இலக்கிய அணி தலைவர் பதவி வழங்கப்பட்டிருக்கிறது.**

அன்வர்ராஜாவைத்தொடர்ந்து மயிலாப்பூர் முன்னாள் எம்.எல்.ஏ.வும் முன்னாள் ராஜ்யசபா எம்.பி.யுமான மைத்ரேயனும் திமுகவில் இணைந்து விட்டார். இவர் பலகட்சி பலவேசமாக திகழ்ந்துகொண்டிருப்பதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. தொடக்கத்தில் பிஜேபி, பிறகு அ.தி.மு.க, பின்னர் ஓபிஎஸ் அணி, அதன் பின் தீபா அணி, பிறகு இபிஎஸ் அணி என மாறி மாறி கட்சி தாவி தற்போது திமுகவில் ஐக்கியமாகி இருக்கிறார்.

நாளை அவருக்கு திமுகவில் முக்கியத்துவம் தராவிட்டால் எந்தக்கட்சிக்கு போவார் என்று உறுதியாக சொல்ல முடியாது.

இப்போது புதிதாக இன்னொரு செய்தி கிடைத்திருக்கிறது. முன்னாள் "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகை ஆசிரியரும் ஓபிஎஸ் அணி பிரமுகருமான கவிஞர் மருதுஅழகுராஜ் வரும் ஆகஸ்ட் 20ந்தேதி திமுகவில் இணைகிறார்.

இவரும் பலகட்சி பலவேசமானவர் தான். ஒரே இடத்தில் இவர்களால் இருக்க முடியாது என்பதற்கு இவர்களின் விசுவாசமின்மையே சாட்சியாக இருக்கிறது.



எடப்பாடி பழனிசாமி



தி.மு.க.வில் இணைந்த மைத்ரேயன்

மருதுஅழகுராஜ் ஆரம்பத்தில் ஜெயா டி.வி, பின் வாழப்பாடி கட்சி, பின்னர் தே.மு.தி.க, அதன் பின்னர் சரத்குமாரின் ச.ம.க. பிறகு மீண்டும் அ.தி.மு.க, எனத்தாவித்தாவி கடைசியாக ஓபிஎஸ் அணியிலிருந்து தற்போது வரும் 20ந்தேதி தி.மு.க.வில் இணையவிருக்கிறார்.

இவருடன் நாம்தமிழர் கட்சியிலிருந்து விலகி சில காலம் அமைதியாக இருந்த காளியம்மாளும் அதே தேதியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் சேரவிருக்கிறார்.

அதிமுகவிலிருந்து சேகர்பாபு, அனிதா ராதாகிருஷ்ணன், ராஜகண்ணப்பன், செந்தில்பாலாஜி, அன்வர்ராஜா, மைத்ரேயன், போன்ற பலர் திமுகவில் சேர காரணமே ஜெயலலிதாவைப்போல் ஆளுமைத்தன்மை கொண்ட தலைவராக எடப்பாடி பழனிசாமி இல்லாததாலும் ஓபிஎஸ் டிடிவி யை இணைக்க மறுத்து பிடிவாதமாக இருப்பதாலும்,டெல்லிக்கு அடிமை சாசனம் எழுதிக்கொடுத்ததாலும் அதிமுகவில் இருக்கும் பல முக்கிய தலைகளுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் போய் விட்டது. அதனால் அதிமுகவின் பகைமை கட்சியில் விரும்பியோ விரும்பாமலோ போய்ச்சேர்ந்து வருகிறார்கள்.

இத்தனைக்கும் எடப்பாடி பழனிசாமி ஊர் ஊராக சுற்றி 200 ரூபாய் கொடுத்து கூட்டத்தை கூட்டி காண்பித்து அடுத்த ஆட்சி அதிமுகதான் என்று தொண்டை கிழிய கத்தினாலும் அதிமுகவின் முக்கிய பிரமுகர்கள் இதையெல்லாம் நம்பத்தயாராக இல்லை என்பதையே கட்சிதாவல்கள் காட்டுகிறது.



செல்லூர் ராஜு



தங்கமணி



மருது அழகுராஜ்



காளியம்மாள்

இவையெல்லாம் அதிமுகவினருக்கு அதிர்ச்சி தரும் வேளையில் ஏதோ அவ்வப்போது டிவியில் தோன்றி காமெடி செய்து மதுரை மேற்கு தொகுதியை வலம் வந்து கொண்டிருக்கும் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜுவும் விரைவில் தி.மு.க.வில் இணையப்போகிறாராம். அதற்கான பேச்சு வார்த்தைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்கிறார்கள் உளவுத்துறையினர்.

முன்னாள் அமைச்சர் தங்கமணியும், கட்சி தாவுவதற்கு தயாராக இருப்பதாகவும் ரகசிய தகவல்கள் உலா வருகின்றன. அவரிடமும் பேச்சுவார்த்தைகள் தொடர்கிறதாம். இதனை தங்கமணி வலுவாக மறுத்து செய்தி வெளியிட்டுள்ளார்

மொத்தத்தில் அதிமுகவிலிருந்து திமுகவுக்கு பலர் வந்துகொண்டிருப்பதால் திமு.கவின் முக்கிய பிரமுகர் ஆர்.எஸ்.பாரதி சொன்னதைப்போல் இங்கே இடப்பற்றாக்குறை ஏற்பட்டு நெருக்கடியாகி விடும் என்ற நிலை வந்து விடும் போலிருக்கிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது கடைசியில் எடப்பாடியே தாவி விட்டாலும் ஆச்சர்யமில்லை என்று மூத்த பத்திரிகையாளர் ஒருவர் நகைச்சுவையாக நண்பர்களிடத்தில்பேசுவது நடந்து விடுமோ? ■

## அடுத்த பாய்ச்சல்..!

பரபரப்பு செய்தி இதழைத் தொடர்ந்து நமது அடுத்த அத்தியாயமாக **www.paraparappucheithi.com** என்கிற இணையதள மின்னிதழிலும் நாம் தடம் பதித்துள்ளோம். ஆகவே நமது இதழில் அங்கம் வகித்துவரும் தோழர்கள் இணையதள பக்கத்திற்கும் செய்திகளை வழங்கிட வேண்டுகிறோம். தாங்கள் வழங்கும் செய்திகள் உடனடியாக வாசகர்களையும், செய்திக்கு சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள், காவல்துறையினர், சமூக ஆரவலர்கள் உள்ளிட்ட செய்திக்கு சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் வாசகர்களுக்கு சுடச் சுட சென்று சேரும்.

இணையதள செய்தியின் வீச்சு பரவலானது, உடனடியாக சென்று சேரக்கூடியது. ஆகையால் பரபரப்பான தகவல்களை விறுவிறுப்பான நடையில் எழுதி நமது வாட்ஸ்அப் குழுவில் அனுப்பினால் அதனை நமது குழுவினர் உடனடியாக நமது இணையதளத்தில் பதிவேற்றுவார்கள். சமூகம், அரசியல், விவசாயம், ஆன்மீகம், குற்றம், வினோத செய்திகளை தாங்கள் எழுதி அனுப்பலாம்.




# ஜெகஜால கில்லாடியாக ஜெகதீஸ்..!

## கண்டுகொள்ளாத RTO சக்திவேல்..?

### ● புலம்பும் வாகன உரிமையாளர்கள்

**திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மூலமாக புதிதாக ஓட்டுனர் உரிமம் எடுத்தல், புதுப்பித்தல், வாகன தகுதி சான்று, வாகனப்பதிவு உள்ளிட்ட பல்வேறு சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்காக நாள் ஒன்றுக்கு சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட மக்கள் வந்து செல்கின்றனர்.**

இங்கு தற்போது மோட்டார் வாகன ஆய்வாளராக சக்திவேல் என்பவர் பணியாற்றி வருகிறார். அலுவலக பணிகளில் குறை சொல்ல முடியாத அளவுக்கு பணிகளை மேற்கொள்ளும் சக்திவேல், தன்னைச் சுற்றி நடக்கும் முறைகேடுகள் மற்றும் இடைத்தரகர்கள் அட்டகாசங்கள் என எவற்றையும் கண்டுகொள்ளாமல் செயல்பட்டு வருவது தான் அவருக்கு எதிராக அலுவலக வாசிகள் வாசிக்கும் குற்றச்சாட்டாக பார்க்கப்படுகிறது.

எந்த வம்பு தும்பும் வேண்டாம் என்று அமைதியாக தனது பணியை செவ்வனே செய்து கொண்டிருக்கும் சக்திவேலின் பெயரைக் கெடுக்கின்ற வகையில், ஜெகதீஸ் என்கிற



புரோக்கர் ஜெகதீஸ்

புரோக்கர் ஒருவர் செயல்பட்டு வருகிறார் என்று புலம்புகின்றனர் மற்ற ஊழியர்கள். புதிய ஓட்டுனர் உரிமம், பெயர்மாற்றம், வாகனச் சான்றிதழ், ஓட்டுனர் உரிமம் புதுப்பித்தல், வாகனப்பதிவு உட்பட அனைத்து பணிகளுக்கும் வருகிற மக்களிடம், பல்வேறு குறைகளைக் கூறி இதற்கெல்லாம் பிரேக் இன்ஸ்பெக்டரை ஹெவியாக கவனிக்க வேண்டும் என்று சொல்லி பணம்பிடுங்கி வரும் ஜெகதீஸ் டூ வீலர் டெஸ்ட்டிற்கு வருபவர்களிடம் வண்டி ஓட்டிக் காட்டாமல் உரிமம் பெற வேண்டுமானால் அதற்கென தனியாக ஒரு தொகையை கறந்து விடுவாராம். அதற்கு ஏ.டி என்கிற சங்கேத பாஷையில் குறிப்பிடும் ஜெகதீஸ், பள்ளி வேன்கள், டிப்பர் லாரிகள் மற்றும் கம்பெனி வாகனங்கள் போன்றவற்றில் எப்.சிக்கு தகுதியில்லாத நிலையில் இருந்தாலும், நான் பார்த்து கொள்கிறேன் என்று அதன் உரிமையாளர்களிடம் காசை உரிந்து எடுத்து விடுவாராம். பார்பதற்கு இந்த பூனையும் பால் குடிக்குமா என்று தோற்றமளிக்கும் ஜெகதீஸ், இந்த பூனை பாலல்ல பஞ்சாமிர்தமே திண்ணும் என்று சொல்லும் அளவிற்கு ஆய்வாளருக்கு அல்வா கொடுத்து வருகிறார் என்று சொல்லி சிரிக்கிறது அலுவலக வட்டாரம்.

இதற்கு முன் இருந்த ஆய்வாளர்கள் ஜெகதீஸை கண்டால் தெரித்து ஓடிக் கொண்டிருந்தது அனைவரும் அறிந்ததே. காரணம் காட்டிக் கொடுப்பதில் கை தேர்ந்தவரான ஜெகதீஸ், தான் தான் பிரேக் இன்ஸ்பெக்டருக்கு ஆல் இன் ஆல் என்று சொல்லி கொண்டு வலம் வந்து கொண்டிருக்கிறாராம். நாள் ஒன்றுக்கு சுமார் இருபத்தைந்தாயிரம் ரூபாய் கையூட்டு வருமானம் பார்க்கும் ஜெகதீஸிடம், மோட்டார் வாகன ஆய்வாளர் சக்திவேல் எச்சரிக்கையாக இருப்பது சாலச்சிறந்தது.



பிரேக் இன்ஸ்பெக்டர் சக்திவேல்

தவறினால் அது அவருக்கே ஒரு நாள் தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

மேற்படி உடுமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஜெகஜால கில்லாடியாக வலம் வரும் ஜெகதீஸ் விரைவில் லஞ்ச ஒழிப்புத் துறையால் தூக்கப்படுவார் என்கின்றனர் விஷயமறிந்தவர்கள். அதற்கு முன் பிரேக் இன்ஸ்பெக்டர் சக்திவேல் விழித்துக் கொள்வது நல்லது..! ■


பரபரப்பு செய்தி
மாதமிருமுறை இதழ்

விளம்பர கட்டணம்

| | பல வண்ணம் | | | | கருப்பு வெள்ளை |
|---|---|---|---|---|---|
| | முதல் உள் அட்டை | கடைசி உள் அட்டை | வெளி அட்டை | உள் பக்கம் | உள்பக்கம் |
| முழு பக்கம் | ரூ.20,000 | ரூ.20,000 | ரூ.30,000 | ரூ.15,000 | ரூ.10,000 |
| அரைப்பக்கம் | | | | ரூ.8,000 | ரூ.6,000 |

தொடர்புக்கு: 99405 14136 / 94450 45619

## விருதுநகர் மாவட்டம்

# யாருக்கு சீட்டு..? யாருக்கு வேட்டு..?

## • தற்போதைய களநிலவரம்

2026 சட்டமன்ற தேர்தல் • தொகுதி நிலவரம்

**விருதுநகர் மாவட்டம் காமராசர் பிறந்த பூமி. காமராசரையே தோற்கடித்த தொகுதியும் அது தான். இங்கு மொத்தம் 7 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை, திருச்சுழி ஆகியவை அதில் அடக்கம்.**

தி.மு.க.வில் விருதுநகர் தெற்கு மாவட்ட செயலாளராக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆரும், வடக்கு மாவட்ட செயலாளரா அமைச்சர் தங்கம்தென்னரசுவும் ரவுண்ட்ஸ் வந்து கொண்டிருக்கிறார்கள். அ.தி.மு.கவில் மேற்கு மாவட்ட செயலாளராக முன்னாள் அமைச்சர் ராஜேந்திரபாலாஜியும், விருதுநகர் கிழக்கு மாவட்ட செயலாளராக முன்னாள் சபாநாயகர் கா.காளிமுத்துவின் தம்பி கா.ரவிச்சந்திரனும் உள்ளனர்.



கே.கே.எஸ்.எஸ்.ஆர்.

தி.மு.கவில் இரண்டு வலுவான அமைச்சர்கள் செயல்படும் அளவு அ.தி.மு.கவில் அவர்களுக்கு ஈடு கொடுக்கும் மாவட்ட செயலாளர்கள் இல்லை. பணபலம், படைபலம், நீண்டகால அரசியல் அனுபவம் எல்லாம் அ.தி.மு.க மாவட்டசெயலாளர்களிடம் இல்லவே இல்லை என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.



தங்கம் தென்னரசு

ராஜேந்திரபாலாஜி இதுவரை தி.மு.க அமைச்சர்களைப்பற்றி வாயே திறப்பதில்லை எனவும் அவரது கட்சியினரே பேசி வருகிறார்கள். அவ்வப்போது ஏடாகூடமாக பேசி சர்ச்சைகளில் சிக்கிக்கொள்வது ராஜேந்திரபாலாஜிக்கு பிடித்தமான ஒன்று. லேட்டஸ்ட்டாக அன்வர் ராஜா தி.மு.கவுக்கு போனால் போகட்டும். இஸ்லாமியர்களின் வாக்கு அ.தி.மு.கவுக்கு தேவையேயில்லை! என்று பேசி சிறுபான்மையினரின் வெறுப்பை சம்பாதித்திருக்கிறார்.

சிவகாசியில் தேர்தல் பணிகளை தொடங்கு என்று எடப்பாடி பழனிசாமி சொன்னதாக அவரே சொல்லி வேலைகளைத் தொடங்கியிருக்கிறார். ஆனாலும், ராஜபாளையத்தில் சென்ற முறை குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோற்றதால் மீண்டும் அங்கேயே போட்டியிடலாமா?



கே.டி.ராஜேந்திரபாலாஜி



தங்கபாண்டியன்



ஜெயபெருமாள்

என்ற ஊசலாட்டத்திலும் அவர்இருக்கிறார். அங்கே மறவர் மகாசபை தலைவர்களுடன் தானாகவே பேசி காலேஜ் கட்டித்தரவா? கட்டிடம் கட்டித்தரவா? அல்லது வேறென்ன செய்ய வேண்டும்? என்று வலியச்சென்று பேசி வருகிறார்.

முன்னாள் எம்.எல்.ஏ. ராஜவர்மனை எப்படியாவது திருச்சுழி தொகுதிக்கு கடத்தி விட வேண்டுமென்று கருதுகிறார். ஏனென்றால் ராஜவர்மனின் நெருங்கிய நண்பரான கிழக்கு மாவட்ட செயலாளர் கா.ரவிச்சந்திரன் சாத்தூரில் நிற்கத்தயாராகி வருவதால் ராஜபாளையத்திலோ அல்லது திருச்சுழியிலோ போட்டியிட ராஜவர்மன் எண்ணுகிறார். ஆனால், ராஜபாளையத்தை சமீபத்தில் பா.ஜ.கவிலிருந்து அ.தி.மு.கவில் சேர்ந்த நடிகை கவுதமி குறி வைக்கிறார். ஆனால் அவருக்கு சென்னையில் ஏதாவது ஒரு தொகுதி ஒதுக்கப்படலாம் என்று சொல்கிறார்கள்.

அ.தி.மு.கவிலிருந்து பா.ஜ.கவுக்கு தாவிய கோபால்சாமி போட்டியிட நயினார்நாகேந்திரனையே சுற்றிச்சுற்றி வருகிறார். அவருக்கு ஜோதிடம் தெரியுமென்பதால் நயினாருக்கும், கேசவவிநாயகத்திற்கும் ஜோசியம் சொல்லியே சீட் வாங்கி விடுவார் என்று பேசுகிறார்கள். அவர் பணக்காரர் என்பதால் ஏழைத்தொண்டர்களையோ, நிர்வாகிகளையோ மதிக்க மாட்டார் என்றும் பேச்சிருக்கிறது. இவர் கம்மவார் நாயக்கர் இனத்தைச்சேர்ந்தவர். நடிகை கவுதமியோ தொகுதியில் கணிசமாக இருக்கும் தெலுங்கு பேசும் ராஜூஸ் இனத்தைச்சேர்ந்தவர்.

## ராஜபாளையம்

ராஜ்பாளையத்தை பொறுத்தவரை முக்குலத்தோர் அதிகமிருந்தாலும், பிரபல தொழிலதிபர் ராம்கோ ராமசுப்ரமண்ய ராஜா குடும்பத்தினரின் ஆதரவை யார் பெறுகிறார்களோ அவரே வெற்றி பெற வாய்ப்பு என விவரமறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

அ.தி.மு.க பா.ஜ.க கூட்டணியில் ராஜபாளையம் அல்லது விருதுநகர் ஆகிய இரு தொகுதிகளில் ஏதேனும் ஒன்றைத்தான் பா.ஜ.கவுக்கு ஒதுக்குவார்கள் என்பதால் பா.ஜ.கவில் கோபால்சாமிக்கும், விருதுநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் பாண்டுரெங்கனுக்கும் கடுமையான போட்டியிருக்கும் என கருதப்படுகிறது. பாண்டுரெங்கனும் தெலுங்கு பேசும் நாயக்கர் இனத்தைச்சார்ந்தவர். ஆனால் அவர் அண்ணாமலையின் தீவிர ஆதரவாளர் என்பதால் அவருக்கு நோ சான்ஸ்!

தி.மு.கவில் நாடார் இனத்தைச்சேர்ந்த சிட்டிங் எம்.எல்.ஏ. தங்கபாண்டியனுக்கே மீண்டும் சீட் என்றாலும், அவர் மீது தொகுதியில் கடும் அதிருப்தி நிலவுகிறது.

புதுமுக வேட்பாளர் ஒருவரும் இரட்டைஇலையில் நிற்கலாம் என அ.தி.முகவில் ரகசியமாக பேச்சிருப்பதால் அந்த புதுமுக தேவரின வேட்பாளர் வலம் வந்தால் பலர் அவரைப்பார்த்து கதிகலங்கிப்போவதற்கும் வாய்ப்புண்டு என்பது புதிய செய்தி. அந்த புதுமுக வேட்பாளர் ராஜூக்களுடன் நல்ல நட்பில் இருப்பவர் என்று சொல்கிறார்கள்.

அப்படி அந்த புதுமுகம் வந்தால் தங்கபாண்டியன் நிச்சயம் தோல்வியடைவார் என இப்போதே சொல்கிறார்கள்.

சீமானின் நாம்தமிழர் கட்சியில் ஒரு நாடாருக்கு சீட் தரப்பட்டால் தங்கபாண்டியனுக்கு மேலும் சிக்கல்தான்.

## ஸ்ரீவில்லிபுத்தூர்

ஸ்ரீவில்லிபுத்தூர் சட்ட மன்ற தொகுதியை கம்யூனிஸ்ட் கட்சி கேட்கிறது. ஆனால்,



கோபால்சாமி



கா.ரவிச்சந்திரன்



ராஜவர்மன்

காங்கிரஸில் ஏற்கெனவே கடந்த தேர்தலில் நின்று தோற்று இறந்து போன மாதவராவின் மகள் திவ்யா நிறுத்தப்படலாம் என கூறப்படுகிறது.

புதிய தமிழகம் டாக்டர் கிருஷ்ணசாமி இத்தொகுதியில் போட்டியிட எண்ணி வத்றாயிருப்பு ஆஸ்பத்திரியை எல்லாம் புதிதாக ஆய்வு செய்ய புறப்பட்டிருக்கிறார். அவர் எந்தக்கூட்டணியில் நின்றாலும் தோற்பது உறுதி. அவரை சாதிவெறியர் என முத்திரை குத்தி விட வாய்ப்பு அதிகம்.

அ.தி.மு.கவில் முன்னாள் எம்.எல்.ஏ. சந்திரபிரபா சீட்கேட்கிறார். அவர் வெற்றி பெற வாய்ப்பு அதிகம். ஆனால் மாவட்ட செயலாளர் ராஜேந்திரபாலாஜியோ பசுபதி பாண்டியனின் மகளுக்கு சிபாரிசு செய்வதாகவும் கூறப்படுகிறது.

சிட்டிங் அ.தி.மு.க எம்.எல்.ஏ மான்ராஜ்க்கு கடுமையான எதிர்ப்பிருப்பதால் அவர் பழையபடி மான் வேட்டைக்குச்செல்வதே நல்லது என்கிறார்கள் அக்கட்சித்தொண்டர்கள். (ஆண் மானா? பெண் மானா? என்று கேட்காதீர்கள்!) ஹய்யோ...! அந்த ஆடியோ வேறு இன்னும் காதில் கேட்டுக்கொண்டேயிருக்கிறதே!

## சிவகாசி

சிவகாசி தொகுதியில் ராஜேந்திரபாலாஜியே வேட்பாளர் என பழனிசாமி கூறியதாக பேசி வந்தாலும், நாயக்கர், முக்குலத்தோர், நாடாரினத்தவர்களின் தீவிர எதிர்ப்பில் பாலாஜி படாத பாடு படுகிறார். மாஃபா பாண்டியராஜனை அவர் சகட்டு மேனிக்கு மிரட்டிப்பேசியது கண்டு நாடார்களுக்கு அறவே பிடிக்க வில்லை. சிட்டிங் காங்கிரஸ் எம்.எல்.ஏ. பிரபல தொழிலதிபர் அசோகனும் நாடார் என்பதால் இரட்டைச்சிக்கல் பாலாஜிக்கு.

ஆனால், மாவட்டத்தில் மொத்தமுள்ள 7 தொகுதிகளில் சிவகாசியை காங்கிரஸ் பெற்று விட்டால் ஸ்ரீவில்லிபுத்தூரை கம்யூனிஸ்ட் கேட்டுப்பெறும் என்பது உறுதி.

ராஜேந்திரபாலாஜி தீவிர அ.தி.மு.க தொண்டர். அடிமட்டத்திலிருந்து வந்தவர். தன்னுடன் இருந்தவர்களில் பலரை வாழ வைத்தவர். நன்கு செலவழிக்கக்கூடியவர். எல்லோரையும் பணத்தாலேயே அடிப்பவர் என்பதெல்லாம் அவரின் கூடுதல் பலம். ஆனால் அவரது வாய்தான் அவருக்கு ஆப்பு வைக்குமென பலர் கூறுகின்றனர்.

தவிர அ.தி.மு.க கூட்டணியிலிருந்த தே.மு.தி.க, தி.மு.க கூட்டணிக்குப்போவது உறுதியாகியிருப்பதால் டப்பா டான்ஸாடியிருமோ என பாலாஜி யோசிக்கிறாராம்.

## திருச்சுழி

திருச்சுழி தொகுதியில் தி.மு.க வேட்பாளராக அமைச்சர் தங்கம் தென்னரசுவே போட்டியிடுகிறார். அ.தி.மு.கவில் சீட் கேட்டு 18 பேர் முட்டி மோதினாலும், ஜெயம் பெருமாளுக்கும், ராஜவர்மனுக்கிடையேதான் சீட் கிடைப்பதில் போட்டியே!

தங்கம் எப்போதுமே தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்புதான் தொகுதியை ஊர் ஊராக வலம் வருவார். அனைத்து அடிப்படை தேவைகளையும் நிறைவேற்றி வருகிறார். திறப்புவிழா போட்டோக்கள் தினமும் வருகின்றன. ஆனால் இவர் மீது சில ஆதிதிராவிடர்கள் கடுமையான அதிருப்தியில் இருந்தாலும் செய்ய வேண்டியதை சரியாக செய்து விடுவார் என்றே பேசுகிறார்கள்.

மீதி தொகுதிகளை பற்றி அடுத்த இதழில் பார்ப்போம். ■







# கோவிலருகே குப்பைக்கூளங்கள் அகற்றப்படுமா?

## கீழக்கரை சீர்கேடு!



இராமநாதபுர மாவட்டம் கீழக்கரையில் பிரசித்தி பெற்ற ஆன்மீக திருத்தலம் அருள்மிகு சொக்கநாதர் கோயில். இக்கோயிலுக்கு வெளியே கழிவுகளும் குப்பைகளும் குவிந்து கிடக்கிறது. இதனால் துர்நாற்றத்துடன் சுகாதார கேடுகளும் பரவி வருகிறது.

மேலும் இக்கோயிலுக்கருகில் புதர்களும் செடி கொடிகளும் அடர்ந்து கிடப்பதால் விஷஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது.

கீழக்கரை பேரூராட்சி நிர்வாகமும் மாவட்ட நிர்வாகமும் உடனடியாக இவ்விஷயத்தில் தலையிட்டு குப்பை கூளங்கள் அகற்றப்பட வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

சுத்தம் சுகம் தரும் என்பது பழமொழி. எனவே கீழக்கரை அதிகாரிகள் சொக்கநாதர் ஆலயத்தின் பெருமை கருதி அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தினமும் குப்பைகளை அகற்றி சுகாதார சீர்கேடுகளை களைய வேண்டும்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று. அதை விட நன்று ஆலயப்பகுதிகளை சுத்தமாக வைத்திருப்பது.

செய்வார்களா? ■

அரசியல்

வீர தீர பராக்கிரமன்

# லட்சியக் கூட்டமா? ரசிகர் கூட்டமா..!

## சிதறுமா சீமானின் வாக்கு வங்கி?

**நடிகர் விஜய் கட்சி தொடங்கிய போது நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் அவருக்கு ஆதரவு தெரிவித்து, ‘தம்பியின் அரசியல் பயணத்துக்கு வாழ்த்துக்கள்’ என்றெல்லாம் கூறி பாராட்டி பேசினார். ஆனால் விஜய், தான் நடத்திய முதல் மாநாட்டில் சீமானை நையாண்டி செய்து பேசினார்.**

இதனால் கடுப்பான சீமான், ஆரம்பத்தில் தன்னை எதிர்த்தாலும், நான் அவரைத்தான் ஆதரிப்பேன் எனக் கூறி வந்த நிலையில், மாநாட்டுக்குப் பிறகு “இனி தம்பியும் கிடையாது, அண்ணனும் கிடையாது” என்று ஒரே போடாக போட்டு விஜய் உடன் மோதலை தொடங்கினார்.

அது மட்டுமல்லாமல், நாதக நிர்வாகிகள் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் இணையப் போவதாக வந்த செய்திகள், சீமானுக்கு பேரதிர்ச்சியாக அமைந்து விட்டது.

இதுஒருபுறம் இருக்க, நடிகர் ரஜினிகாந்த் அரசியல் கட்சி தொடங்கப் போவதாக அறிவித்த போது, சீமான் அவருக்கு நேரெதிரான நிலை எடுத்து அவரை மிகக் கடுமையான வார்த்தைகளில் விமர்சித்தார். ரஜினிகாந்த் அரசியலுக்கு வரப் போவதில்லை என்று அறிவித்தவுடன், சீமான் தனது விமர்சனங்களை நிறுத்திக் கொண்டார். ரஜினிகாந்த்தை அரசியல் ரீதியாக விமர்சித்து கடும் சொற்களைப் பயன்படுத்தியது காயப்படுத்தியிருந்தால் அதற்காக வருந்துகிறேன் என்றும் கூட கூறியிருந்தார். ரஜினியின் அரசியல் பிரவேசத்தை கடுமையாக விமர்சித்த சீமான், அவர் அரசியலுக்கு வரவில்லை என்றவுடன் தனது நிலைப்பாட்டை மொத்தமாக மாற்றிக் கொண்டார்.



இந்நிலையில், தமிழக அரசியலில் விஜய் யின் அரசியலை இப்போது சீமான் கடுமையாக எதிர்த்து வருகிறார். தற்போது உச்சகட்டமாக “லட்சிய கூட்டமா? ரசிகர் கூட்டமா? பார்த்து விடுவோம். இனி போர்தான்!” என்று சீமான் கொந்தளித்திருக்கிறார். போர்ப்பரணி பாடி விட்டார்.

இதுகுறித்து பேசிய மூத்த பத்திரிகையாளர் மணி,” ஆரம்பத்தில் விஜயை தம்பி அரசியலுக்கு வருவது பாராட்டுக்குரியது என்று வரவேற்ற சீமான் தற்போது முதல்வர் ஸ்டாலினை சந்தித்து விட்டு வந்த பின் கடுமையாக எதிர்க்கிறார்.

இருவருமே திமுகவை கடுமையாக எதிர்த்து வருபவர்கள். இருவருக்குமே பொது எதிரி திமுகவும் பாஜகவும்தான் என்பது வெளிப்படையாக இருக்கும் பட்சத்தில் திடீரென்று விஜய் பக்கம் சீமான் திரும்பியிருப்பது சந்தேகத்துக்குரியதாக பார்க்கப்படுகிறது. பெரியாரை ஆதரிப்பது விஜயின் நிலைப்பாடு. ஆனால் அலுவலகத்தில் தேங்காய் பழம்

வெத்தலை பாக்குடன் விஜயின் பூஜை புனஸ்காரங்களை பார்க்கையில் அது சந்தேகத்திற்குரியதாகிறது. மேலும் சீமானின் நோக்கம் என்னவென்று புரியாமல்தான் மக்கள் உள்ளார்கள்!" என்று கூறியிருக்கிறார்.

ஜர்னலிஸ்டும் அரசியல் விமர்சனத்தில் நையாண்டி நாயகனுமான உமாபதி பேட்டி ஒன்றில், " நாம்தமிழர் கட்சி சீமான் கலைஞரின் மூத்தமகன் மு.க.முத்துவின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்க முதலமைச்சர் வீட்டுக்கு செல்வது முறையா? உண்மையாகவே துக்கம் விசாரிக்க சென்றிருந்தால் மு.க.முத்துவின் மகனை அல்லது அவரது மருமகனை அல்லவா சந்தித்திருக்க வேண்டும்? பேரன் பேத்தியிடமாவது கேட்டிருக்கலாம். அதை விட்டுவிட்டு சித்தப்பா வீட்டுக்குப்போய் செத்ததை கேட்பது ஏன்? இதில் அரசியல் இல்லையா?" என்று கேட்கிறார்.



பத்திரிகையாளர் மணி



பத்திரிகையாளர் உமாபதி

"முதலமைச்சரை மரியாதை நிமித்தமாக ஒரு அரசியல் கட்சித்தலைவர் சந்திப்பது பெரிய குற்றமா? என்னதானிருந்தாலும் மு.க.முத்துவிற்கு தம்பிதானே மு.க.ஸ்டாலின். அவரிடம் நலம் விசாரிப்பதில் என்ன பெரிய குற்றமாகி விடப்போகிறது? கருத்து வேறுபாடுகள்ஆயிரம் இருக்கலாம். ஆனால் நலம் விசாரிப்பது துக்கம் விசாரிப்பது, ஆறுதல் சொல்வதெல்லாம் தமிழர் பண்பாடுதானே!" என்று எதிர்கேள்வி கேட்கிறார் நா.த.க. பிரமுகர்.

நாம் பிரபல யூ டியூபர் ஒருவரிடம் கேட்ட போது, "சீமானுக்கு தற்போது 8% வாக்குகள் இருப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதை தக்க வைக்கவே அவர் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறார். அந்த வாக்கு வங்கியில் ஓட்டை விழுந்து விடக்கூடாதே.... விஜய் கட்சி சீமானின் வாக்கு வங்கியை சிதைத்து விடக்கூடாதே... என்றுதான் சீமானுக்கு கோபம். அந்த விஷயத்தை மனதில் வைத்துதான் திடீரென "லட்சியக்கூட்டமா? ரசிகர் கூட்டமா?" என்று கோபத்துடன் கொளுத்திப் போட்டிருக்கிறார்!" என்று போட்டுடைத்தார்.

சீமானுக்கு அனைத்து சாதியினரிடமும் வாக்குகள் கணிசமாக உள்ளது. ஆனால் அவர் அதிமுகவுடன் கூட்டணி சேரப்போவதாக தகவல்கள் வருகின்றன. ஒருவேளை அவர் அதிமுகவுடன் கூட்டணி வைத்தால் அவருடன் இருக்கும் சிறுபான்மையினரின் வாக்குகள் அவருக்கு உறுதியாக கிடைக்காது. மேலும் சீமான் கூட்டணி வைத்தால் அவரின் 8% வாக்குகள் 5 சதவீதமாகக் குறைந்து விடும். கூட்டணியில்லாமல் போட்டியிட்டால் கொஞ்சம் கூடும்.

அவருக்கு நாடார் இன வாக்குகள் அதிகமாக கிடைக்கலாம் என்று சிலர் பேசி வந்தாலும் கனிமொழி வந்த பின் அதிலும் ஓட்டை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, அனிதாராதாகிருஷ்ணனை எதிர்த்து எப்படியும் அதிமுகவில் இன்னொரு நாடார்தான் வேட்பாளராவார். திமுக நாடாருக்கும் அதிமுக நாடாருக்கும் இடையேதான் போட்டியே ஏற்படும். இதில் விஜய் கட்சியும் ஒரு நாடாரை நிறுத்தினால் அதனாலும் சீமான் கட்சிக்கு வாக்குகள் மேலும் குறையும். ஆக, எப்படி பார்த்தாலும் சீமானின் வாக்கு வங்கி சிதையத்தான் போகிறது!" என்று கூறி சிந்திக்க வைத்தார்.



சீமான் ஒரு போராளி. தனக்கொரு வாய்ப்பு தந்து பாருங்கள் இந்த நாட்டையே தலைகீழாக மாற்றிக் காட்டுகிறேன் என்றெல்லாம் அவர் அறைகூவல் விட்டே வருகிறார். ஆவேசமாக உரிமைக்குரல் எழுப்புகிறார். சிங்கம் போல் கர்ஜிக்கிறார். சீறியெழுகிறார். ஆனால் 6% வாங்கினாலும் 8% வாங்கினாலும் அதை வைத்து ஒன்றுமே செய்ய முடியாது என்று அடித்துச் சொல்பவர்களுக்கு மத்தியில் அவர் தன் வாக்கு வங்கியை தக்கவைப்பது கஷ்டமான காரியம்!" என்றுதான் பேச்சிருக்கிறது. ■

ம்...... பார்ப்போம்!

ஆம்பூர் | மகேஸ்வரன்

## பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல்...

# ரவுடிகளை ஏவிவிட்ட தலைமையாசிரியர்..!



**தெரு ரவுடிகளை விட்டு செய்தியாளர்களை தாக்கிய தலைமையாசிரியரின் செயல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அருகேயுள்ள ராமச்சந்திராபுரத்தில் அமைந்துள்ள அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், பள்ளி வளாகத்தில் கலையரங்க கட்டிடம் கட்டுவது தொடர்பாக அதே பகுதியை சேர்ந்த இரு கோஷ்டிகளுக்கிடையே கருத்து வேறுபாடு இருந்துவந்துள்ளது.

கலையயரங்கம் கட்ட வேண்டும் என அந்த ஊரில் ஒரு கோஷ்டியும். கட்டிடம் கட்டினால் எங்களால் விளையாட முடியாது என்று அந்த ஊர் பஞ்சாயத்து தலைவரின் கோஷ்டியும் வம்பிழுத்துக் கொண்டு வந்தனர்.

அதன் தொடர்ச்சியாக கடந்த 2ஆம் தேதி பள்ளியில் கட்டிடம் கட்ட தொழிலாளர்கள் வந்தபோது, அரங்கம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த பஞ்சாயத்து தலைவரின் கோஷ்டியினர், கட்டிட தொழிலாளர் ஒருவரை தாக்கியதில் அவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். மேலும், கடந்த 4ஆம் தேதி 150 பேர் கொண்ட இரு கோஷ்டிகளும் பள்ளியில் நுழைந்து, கட்டிடம் கட்ட வேண்டும் என்றும். கட்டிடம் வேண்டாம் என்றும்









சரஸ்வதி

மருத்துவமனையில் செய்தியாளர்கள்

தலைமையாசிரியர் சரஸ்வதி முன் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டிருந்தனர்.

அதனைக் கேள்விப்பட்டு, ஆம்பூர் பகுதியை சேர்ந்த செய்தியாளர்கள் மூன்று பேர் செய்தி சேகரிக்க பள்ளிக்குச் சென்று தலைமை ஆசிரியை சரஸ்வதியிடம் சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்களை வீடியோ மற்றும் புகைப்படங்கள் எடுக்க தொடங்கினர்.

அதனைப் பார்த்த தலைமை ஆசிரியை சரஸ்வதி டேய் ... உங்களை யார்ரா .. உள்ளே விட்டது! என செய்தியாளர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, கட்டிடம் வேண்டாம் விளையாட இடம் வேண்டும் என்று குதித்துக் கொண்டிருந்த கும்பலை பார்த்து அவர்களை அடித்து விரட்டுங்கள் என கூச்சலிட்டார்.

> **தலைமை ஆசிரியை சரஸ்வதி டேய்... உங்களை யார்ரா... உள்ளே விட்டது! என செய்தியாளர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, கட்டிடம் வேண்டாம் விளையாட இடம் வேண்டும் என்று குதித்துக் கொண்டிருந்த கும்பலை பார்த்து அவர்களை அடித்து விரட்டுங்கள் என கூச்சலிட்டார்.**

அப்போது, அந்த கோஷ்யில் கஞ்சா போதையில் இருந்த சில தெரு ரவுடிகள், செய்தியாளர்களின் செல்போன்களைப் பறித்தும், ஆடைகளைக் கிழித்து தாக்குதல் நடத்தினர்.

அந்தத் தாக்குதலில் இருந்து தப்பிய செய்தியாளர்கள், ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், கும்பலை ஏவிவிட்ட தலைமை ஆசிரியர் சரஸ்வதி மற்றும் தாக்குதல் நடத்திய தெரு ரவுடிகள் மீது உமராபாத் காவல்நிலையத்தில் புகார் அளித்தனர்.

செய்தியாளர்கள் மீதான இந்தத் தாக்குதலுக்கு துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பத்திரிகையாளர்கள் சங்கங்களின் நிர்வாகிகள் கண்டனத்தை தெரிவித்திருந்தனர். அதனை தொடர்ந்து புகாரின் பேரில் செய்தியாளர்களை தாக்கிய தெரு ரவுடிகள் மீதும், தூண்டிவிட்ட தலைமை ஆசிரியர் சரஸ்வதி மீதும் வழக்கு பதிந்தனர்.

அதில் பஞ்சாயத்து தலைவரின் கோஷ்டியை சேர்ந்த மூன்று தெரு ரவுடிகளை சம்பவத்தன்று இரவோடு இரவாக கைது செய்து ஜாமினில் விடுவிக்கப்பட்டனர். தலைமறைவான பள்ளி தலைமையாசிரியை சரஸ்வதி, அடுத்த ஆண்டு ஓய்வு பெறும் நிலையில் இருப்பதால். மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில், மாவட்ட பள்ளி கல்வித்துறை ட்ரான்ஸ்பர் செய்துள்ளது. ■

திருப்பத்தூர் · மகேஸ்வரன்

2026 சட்டமன்ற தேர்தல் · தொகுதி ரவுண்ட்அப் ·


## திருப்பத்தூர் தொகுதி

## அ.தி.மு.க.வில் முட்டி மோதும் மூவர்..?

# நாளை நமதே... நான்கும் நமதே..?

## ● அதிரடி காட்டும் மாஜி வீரமணி

**2026ல் தமிழக சட்டமன்ற தேர்தல் வருவதால், தான் பார்த்து பார்த்து செதுக்கிய ஜோலார்பேட்டை தொகுதியை கடந்த 7 மாதங்களாகவே வலம் வர ஆரம்பித்துவிட்டார் மாஜி மந்திரி வீரமணி. அ.தி.மு.க மட்டுமல்லாது, பிற கட்சியினர் நடத்தும் நிகழ்ச்சிகளிலும் கலந்துக் கொண்ட மாஜி வீரமணிக்கு சென்னை உயர்நீதிமன்றத்தால் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கப்பட்டது.**


கே.சி.வீரமணி

அதில், 2021 சட்டமன்றத் தேர்தலின் போது தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் பிரமாணப் பத்திரத்தில், வெளிநாடுகளில் வாங்கிய சொத்துக்களை மறைத்ததாகவும், தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் தவறான பான் எண்களைக் கொடுத்துள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியதையடுத்து, முன்னாள் அ.தி.மு.க அமைச்சர் கே.சி. வீரமணி மீது, இந்திய தேர்தல் ஆணையம் (ECI) தொடர்ந்த குற்றவியல் வழக்கு நடைபெற்று வருகிறது, அந்த வழக்கை ரத்து செய்யக் கோரியும், தடை விதிக்கக் கோரியும், விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கக் கோரியும் மாஜி மந்திரி வீரமணி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

கடந்த ஜூலை 18ஆம் தேதி அனைத்து

தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி வேல்முருகன், முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். இந்த வழக்கில் பின்னர் விரிவான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டிருந்தார்.

அதனால் இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்ட மாஜி மந்திரி வீரமணி, 2026 தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் உருவாகியுள்ளது, அப்படி ஒரு சூழல் வந்ததால். ஜோலார்பேட்டையில் அவரது அண்ணன் கே.சி.அழகிரி அல்லது தனது மகனை களம் இறக்க முடிவு செய்துள்ளாராம் மாஜி.

அதே வேளையில், திருப்பத்தூர் தொகுதியையும் கைப்பற்ற வேண்டுமென தனது ஆதரவாளர்களான டாக்டர் திருப்பதி, டி.டி.குமார், டி.டி.சங்கர் ஆகியோரில் யாரை களம் இறக்குவது என்று, இருவரையும் தனித்தனியாக அழைத்து தீவிரமாக ஆலோசனை நடத்தியுள்ளாராம். சமீபத்தில்

திருப்பத்தூர் வருகை தந்த முன்னாள்முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு வரவேற்பு அளிப்பது குறித்து திருப்பத்தூர் தொகுதி அ.தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தை தனக்கு சொந்தமான திருப்பத்தூர் ஓட்டல் ஹில்ஸில் கூட்டினார்.

அக்கூட்டத்தில், திருப்பத்தூர் ஒன்றிய செயலாளர் திருப்பதி, நகர செயலாளர் டி.டி குமார், கந்திலி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.டி.சங்கர் என அவரது ஆதரவாளர்கள் மட்டுமே கலந்துக்கொண்டனர்.



திருப்பதி



குமார்



சங்கர்

அப்போது பேசிய வீரமணி, திருப்பத்தூர் தொகுதி தி.மு.க கோட்டை என்பதை தகர்த்து, அ.தி.மு.க கோட்டை என்பதை மாற்ற வேண்டும். இந்த முறை தேர்தல் பிரச்சார களத்தில் நானே இறங்குறேன் என சபதம் செய்தார் மாஜி மந்திரி வீரமணி என்கின்றனர் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள்.

இதுகுறித்து கூட்டத்தில் கலந்துகொண்டவர்களிடம் பேசினோம்.

அப்போது, ஒருவேளை நீங்கள் (மாஜி அமைச்சர் வீரமணி) தேர்தலில் நிற்க முடியாமல் போனால் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளின். வெற்றிக்கு உழைக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி உத்தரவிட்டுள்ளார். எனவே, நாளை நமதே நான்கும் நமதே என சூளுரைத்த மாஜி வீரமணி, நான்கிலும் வெற்றி வாகை சூடி தனது ஆளுமையை நிருபித்துவிட வேண்டுமென்ற கட்டாயததிற்கு தள்ளப்பட்டுள்ளார் என்றனர்.

ஆனால், அவரின் பினாமி என்று கூறப்படும் டி.டி.சங்கர், 2016ல் ரஜினி மன்ற நிர்வாகியாக இருந்தவர். மாஜி ஆசியோடு அ.தி.மு.கவில் ஐக்கியமாகி பாசறை மாவட்டம் செயலாளர், திருப்பத்தூர் நகர வார்டு கவுன்சிலர், சமீபத்தில் கந்திலி கிழக்கு செயலாளராக என எல்லா வகையிலும் கிடுகிடுவென்று உயர்ந்தவருக்கு , சம்பந்தமே இல்லாத ஒன்றியத்திற்கு செயலாளராக வந்த சங்கருக்கு பலத்த எதிர்ப்புகள் எழுந்தது. அந்த சர்ச்சை இன்னும் ஓய்ந்தபாடில்லை. இன்னமும் ஒன்றிய செயலாளரை மாற்றக்கோரி கந்திலி கிழக்கு ஒன்றிய அ.தி.மு.கவினர், மாஜி மந்திரி வீரமணி வீட்டிற்கு நடையாக நடந்துவருன்றனர். அவர் அகமுடையர் சமூகத்தை சேர்ந்தவர். கந்திலி உள்பட தொகுதி முழுவதும் பெரும்பாலானவர்கள் வன்னியர்கள் நிறைந்த தொகுதி. தொகுதிக்கு

தெரியாத முகமாக இருக்கிறார் சங்கர். எனவே அவருக்கு சீட் வழங்கினால் வெற்றி பெறுவது இயலாத காரியம் என்றனர்.

மேலும், மாஜிக்கு மிகவும் வேண்டப்பட்டவர் 2011 ல் வேட்பாளராக களம் கண்டு தி.மு.கவிடம் படு தோல்வி அடைந்த டி.டி.குமார், அப்பா, அம்மா வெவ்வேறு சமூகத்தினர் என்று கூறப்படுகிறது, கடந்த வாரம் பள்ளி மாணவன் இறப்பில் நீதி கேட்டு தெருவில் இறங்கி அதிரடி காட்டியவர். இவருக்கு மீண்டும் சீட் வழங்கினால், கோடிகளை வாரி இறைக்கும் அளவுக்கு வசதி தற்போது கைவிட்டு போய்விட்டது. அவரை வளர்த்த ராகவேந்திரா டி.வி சென்டர் அந்த விசயத்தில் வீக்காதி பிசினஸை அடியோடு புதைத்துவிட்டார். செலவு செய்து வெற்றி பெறும் அளவுக்கு அவரிடம் பணமும்மில்லை, மாஜிக்கும் மனசு இல்லை என்றனர்.

தொடர்ந்து பேசிய அவர்கள், மாஜி வீரமணி, ஜோலார்பேட்டையில் தேர்தல் வேளையில் ஈடுபட்ட நாள்முதல், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள கோவில் நிகழ்ச்சிகளில் பரிவட்டத்தோடு பவனி வருவது. கட்சியினர் காது குத்து, திருமணம், இறப்பு நிகழ்ச்சிகளில் மாஜியோடு வலம் வருபவர், கால்நடை மருத்துவர் டாக்டர் திருப்பதி. ஒன்றிய சேர்மனாக இருந்தவர் தற்போது ஒன்றிய செயலாளராக இருப்பவர். வசதி வாய்ப்பில் வளர்ந்து நிற்பவர். எடப்பாடி பழனிச்சாமி சமூகமான வெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவர். இந்த சமூகத்தினர் தொகுதி முழுவதும் கணிசமாக நிறைந்துள்ளனர். அடாவடி, ஆர்ப்பாட்டம், கட்டப் பஞ்சாயத்து இல்லாத அரசியல்வாதியாக வலம் வருகிறார். தொகுதியில் நல்ல பெயரை கொண்டவர். 40 ஆண்டுகால அ.தி.மு.க பற்றாளர். பலமுறை சீட் கேட்டு மறுக்கப்பட்டவர். தனது தலைவர் எம்.ஜி.ஆர் எப்படி மூகாம்பிகை கோயிலுக்கு சென்று அரசியலில் வெற்றி வாகை சூடி வந்தாரோ, அதே வகையில் திருப்தியும் அடிக்கடி மூகாம்பிகை கோயிலுக்கு சென்று வருகிறார்.

சமீபகாலமாக தொகுதிகளில் நடக்கும் நல்லது கெட்டது என அனைத்து நிகழ்வுகளிலும் மாஜி இல்லை என்றாலும் அழையா விருந்தாளியாக பங்கெடுத்து வருகிறார். தற்போதைய திருப்பத்தூர் எம்.எல்.ஏ திருப்பதிதான் என சொல்லும் அளவுக்கு தொகுதி மக்களிடம் அன்றாடம் பரிச்சயமாகி வருகிறார். கட்சி நிர்வாகிகளோடு களத்தில் நிற்கிறார். இந்த முறை எங்க டாக்டருக்கு தான் சீட்டு. அதை மேலிடமே உறுதி செய்துவிட்டது என்கிறார்கள் சில முத்த ரத்தத்தின் ரத்தங்கள்.

இவர்களை தவிர, மாவட்ட வழக்கறிஞர் அணி செயளாளர் ரவிக்குமார் நாயுடு சமூகத்தை

**"திருப்பத்தூர் தொகுதியில் மாஜி வீரமணியே தேர்தல் களத்தில் இறங்குவதால், தொடர்ந்து இரண்டுமுறை வெற்றி வாகை சூடி, மூன்றாவது முறையாகவும் எம்.எல்.ஏ. ஆகி மந்திரியாதி விடலாம் என்கின்ற கனவில் இருக்கும் தி.மு.க எம்.எல்.ஏ. நல்லதம்பிக்கு இந்த தேர்தலில் வெற்றி எளிதாக கிட்டாது.**

சேர்ந்தவர். அவருக்கும் மாஜி வீரமணிக்கும் ஏழாம் பொருத்தம். தனக்கு வேண்டப்பட்ட தலைமையிடத்தின் முக்கிய புள்ளி மூலம் சீட்டை பெற்று விட வேண்டும் என்று முயற்சிக்கிறார்.

அடுத்ததாக, எம்.ஜி.ஆர் ரசிகராக அரசியலில் அடியெடுத்து வைத்தவர் லலிதா மஹால் பெருமாள். வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர் என்பது அவருக்கு கூடுதல் பலம். அதேபோல், பணபலம் படைத்தவர். தொகுதி முழுவதும் பரிச்சயம் ஆனவர், ஒன்றிய செயலாளர் பதவி கேட்டு மறுக்கப்பட்டவர். துணை பொதுச்செயலாளர் கே.பி.முனிசாமி நட்பில் இருப்பதால் சீட்டு கிடைக்கலாம் என்கின்றனர். கிடைக்காத பட்சத்தில் சுயேட்சையாக போட்டிடவும் முடிவு செய்துள்ளாராம்.

அதேபோன்று, அருந்ததியர் சமூகத்தை சேர்ந்த திருப்பத்தூர் முன்னாள் நகர்மன்ற தலைவி லீலாவின் கணவர் சுப்ரமணியமும் சீட் கேட்க முடிவு செய்துள்ளதாக கூறுகின்றனர்.

மாஜி வீரமணியின் குட்புக்கில் இருக்கும். டாக்டர் திருப்பதி, டி.டி.குமார். டி.டி.சங்கர் ஆகிய மூவரில் திருப்பதி, அல்லது சங்கரை சாய்ஸாக வைத்துள்ளாராம் வீரமணி. அதிலும் மாஜி வீரமணி ஆசிர்வாதத்தோடு டாக்டரைதான் எங்கள் தலைமையே திருப்பத்தூர் தொகுதிக்கு டிக் அடித்து வைத்துள்ளது என்கின்றனர்.

திருப்பத்தூர் தொகுதியில் மாஜி வீரமணியே தேர்தல் களத்தில் இறங்குவதால், தொடர்ந்து இரண்டுமுறை வெற்றி வாகை சூடி, மூன்றாவது முறையாகவும் எம்.எல்.ஏ. ஆகி மந்திரியாதி விடலாம் என்கின்ற கனவில் இருக்கும் தி.மு.க எம்.எல்.ஏ. நல்லதம்பிக்கு இந்த தேர்தலில் வெற்றி எளிதாக கிட்டாது. கடும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளார் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள். ■

வால்பாறை | நெப்போலியன்

## வால்பாறை தொகுதி

# அசத்தப்போவது யாரு..?

## வெற்றி நிச்சயம் உடன் பிறப்புகள் உற்சாகம்..!

**கோவை மாவட்டம் வால்பாறை சட்டமன்ற தொகுதி, வால்பாறை நகராட்சி, ஆனைமலை பேரூராட்சி, ஒடையகுளம் பேரூராட்சி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி மற்றும் கோட்டூர் பேரூராட்சி ஆகிய நான்கு பேருராட்சிகள் மற்றும் அம்பராம்பாளையம், ஆத்துப்பொள்ளாச்சி, மார்ச்சிநாயக்கன்பாளையம், சிங்காநல்லூர், வக்கம்பாளையம், பெத்தநாயக்கனூர், எஸ்.நல்லூர், பில்சின்னம்பாளையம், சோமந்துறை, தென்சித்தூர், பெரிய போது, காளியாபுரம், தென்சங்கம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம், ரமணமுதலிபுதூர், கம்மாளப்பட்டி, அர்த்தநாரிபாளையம், ஜல்லிப்பட்டி, தொரையூர் மற்றும் அங்களகுறிச்சி கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும்.**

மேற்படி வால்பாறை தொகுதியில் அ.தி.மு.க, தி.மு.க ஆகிய இரண்டு கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிடும் கட்சிகளுக்கே அந்த இரண்டு கட்சிகளுமே பெரும்பாலும் இத்தொகுதியை ஒதுக்கும். சில தேர்தல்களில் இரண்டு கட்சிகளும் நேரடியாக நின்று வெற்றி தோல்விகளை சந்தித்ததும் உண்டு. அந்த வகையில் பார்த்தால் அ.தி.மு.கவே அதிகளவில் வெற்றி பெற்றுள்ளது. வால்பாறை சட்டமன்றத் தேர்தல் வரலாற்றில் மலைமேல் உள்ள நகரப் பகுதியில் தி.மு.கவிற்கே எப்போதும் செல்வாக்கு இருந்து வந்தது. ஆனால், கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் அதில் மாற்றம் கண்டு அ.தி.மு.க முன்னிலை பெற்றது. குறிப்பிடத்தக்கது. இப்படி தி.மு.கவிற்கு தொடர்ந்து சவாலாகவே இருந்து வரும் வால்பாறை தொகுதியில்








நலத்திட்ட உதவிகள்

போட்டியிடலமா.? அல்லது கூட்டணி கட்சிகளில் ஒன்றுக்கு தள்ளி விடலாமா என்று தீவிர ஆலோசனையில் ஆளுந்தரப்பு இறங்கியுள்ளது.

அதே நேரத்தில், வரும் தேர்தலில் வெற்றி நிச்சயம். அதுவே சத்தியம். அதனால் நாமே களம் காண்போம் என்று கட்சி நிர்வாகிகள் முதல், கடைக்கோடி தொண்டர்கள் வரை இப்போதிருந்தே தலைமைக்கு தந்தி அடித்து கொண்டிருக்கின்றனராம். ஒருவேளை தி.மு.க நேரடியாக களம் கண்டால் எளிதாக வெற்றி பெற கூடிய வகையில் மக்கள் மத்தியிலும், கட்சியினர் நடுவிலும் நன்மதிப்பைப் பெற்றுள்ள நல்லதொரு இளைஞரை வேட்பாளராக நிறுத்த, கண்ணுங்கருத்துமாக ஆலோசித்து வருவதாக தி.மு.க தரப்பில் கூறப்படுகிறது.

இந்நிலையில் வால்பாறை தி.மு.க நகரச் செயலாளர் சுதாகரோ தனக்குத் தான் சீட் என்று அடித்துச் சொல்லிக் கொண்டு தலைகால் புரியாமல் ஓடிக் கொண்டிருக்கிறார். இந்த முறை எனக்குத் தான் என்று தீவிர நம்பிக்கையுடன் வலம் வந்த திப்பம்பட்டி ஆறுச்சாமிக்கோ, தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரியத் தலைவர் பதவி வழங்கப்பட்டு விட்டது ஆக அவரும் ஆட்டத்தில் இல்லை. மேற்படி இருவரையும் தவிர சொல்லிக் கொள்ளும் அளவுக்கு வேறொருவரும் இல்லை. அதே நேரத்தில் நாமும் வேட்பாளர் ரேஸில் இருப்பவர்கள் யார்.? அவர்களுக்கு மக்கள் மத்தியிலும், கட்சியினர் மத்தியிலும் உள்ள செல்வாக்கு மற்றும் வெற்றி வாய்ப்பு எப்படி போன்ற பல்வேறு அம்சங்களை ஆராய வால்பாறை சட்டமன்ற தொகுதியில் களமிறங்கினோம்.

முதலாவதாக, வேட்பாளராக யாரை நிறுத்தினால் வெற்றி வசமாகும் என்ற நமது கேள்விக்கு ஒரு சிலர் நகரச் செயலாளர் சுதாகரை கை காட்டினாலும், கட்சியின் இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் பலரிடம், சுதாகர் மீது கடுமையான அதிருப்தி காணப்படுகின்றன. மற்றபடி கட்சியின் மேல்மட்டத்தில் உள்ள சிலரோ குறிப்பிட்ட ஒருவரை அடையாளம் காட்டுகிறார்கள். அவர் யார்.? என்றால், கோவை தெற்கு மாவட்டம், இருகூரை சேர்ந்த மா,செல்வன் தான் மேற்படி நபர் என்கின்றனர் கட்சியினர். இருகூர் தி.மு.க நகரத் துணைச்செயலாளரான மா.செல்வனைக் குறித்து அவர் வசிக்கும் பகுதி மக்கள் மற்றும் கட்சிக்காரர்கள் என பலதரப்பிலும், பல்வேறு கோணங்களில் நாம் விசாரித்த வகையில் செல்வனுக்கு கட்சி நிர்வாகிகள் மத்தியிலும், தொகுதிக்குட்பட்ட பெரும்பாலான பகுதி மக்களிடத்திலும் ஏகோபித்த ஆதரவு நிலை காணப்படுகிறது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

செல்வனைக் குறித்து அவரை நன்கு அறிந்த பொதுமக்கள் மற்றும் கட்சிக்காரர்கள் நம்மிடம் கூறும்போது,

முதலாவது செல்வன் பழகுவதற்கு எளிமையானவர். தன்னலமற்ற சேவை செய்பவர். உதவும் உள்ளம் கொண்டவர். அவர் மக்களுக்கு செய்த மற்றும் செய்து வருகிற உதவிகளின் பட்டியல் மிகவும் நீளமானது. குறிப்பாக இஸ்லாமிய மற்றும் கிறிஸ்துவ சமுதாயமான சிறுபான்மையின மக்களுக்கு அளப்பரிய நன்மைகள் செய்து வருகிறார். தவிர அனைத்து தரப்பு மக்களுக்கும் விஷேச நாட்களான தீபாவளி, பொங்கல், ரம்ஜான், கிறிஸ்துமஸ் போன்ற நாட்களில் புடவை, வேட்டி சட்டை மற்றும் வீட்டு உபயோக பொருட்களான அரிசி, பருப்பு, எண்ணெய் அடங்கிய சமையல் பொருட்கள் என்று வாரி வழங்கி, அவர்களின் குடும்பத்தில் ஒருவராக திகழ்ந்து வருகிறார். இதுதவிர, பள்ளி மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில்,

அவர்களுக்கு தேவையான நோட்டு புத்தகங்கள், சீருடை, பேனா பென்சில், புத்தக பை என்று அனைத்தையும் வாங்கிக் கொடுத்து அவர்களது வாழ்வில் மறக்க முடியாத ஒருவராக திகழ்ந்து வருகிறார் என்று செல்வனின் செயல்பாடுகள் குறித்து மக்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

அதே நேரத்தில், கட்சிக்காரர்களும் செல்வன் குறித்து நல்ல கருத்துக்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டனர். அதாவது, 2019 கொரோனா சமயத்தில், தி.மு.க எதிர்கட்சியாக இருந்த போதிலும், அன்றைய எதிர்கட்சித் தலைவராக இருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் மக்களின் உதவிக்காக ஒரு போன் நம்பர் வெளியிட்டு, அதில் தொடர்பு கொண்டு உதவி கேட்பவர்கள் எந்த மூலையில் இருந்தாலும் அந்தந்த பகுதி நிர்வாகிகள் மூலம் அவர்களுக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்படி செய்தது மக்கள் மனங்களில் இன்று வரை நீங்காமல் உள்ளது. அந்த சமயத்தில் செல்வனின் செயல்பாடுகள் பாராட்டுக்குரியது என்று சொல்லும் கட்சிக்காரர்கள், தொடர்ந்து கொரோனா சமயத்தில் கட்சித் தலைவரின் உத்தரவை தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்கிற முனைப்புடன் செயல்பட்டு, மக்களின் ஒவ்வொருவர் வீட்டிற்கும் ஓடி ஓடிச்சென்று உதவிகளை செய்த செல்வன், தனது ஊருக்கு அருகில் உள்ள சிங்காநல்லூரில் புறநகர் காவல் நிலையம் கட்டுமான பணிக்கு 80 சதவிகித பணம் கொடுத்தது உள்பட ஏராளமான மக்கள் நலப்பணிகள் செய்து வருகிறார். மேலும், கட்சி தலைமையின் கவனமும் செல்வன் மீது உள்ளது. இப்படிப்பட்ட ஒருவரை வேட்பாளராக நிறுத்தினால் வெற்றி வசமாகும் என்பதே நிதர்சனம் என்கின்றனர் கட்சியினர்.

2001 சட்டமன்றத் தேர்தலுக்குப் பின் நடந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் 99 சதவிகிதம் வெற்றி பெற்று கோவை மாவட்டத்தையே அதிர வைத்த பொறுப்பு அமைச்சர் செந்தில் பாலாஜி, வரும் 2006 தேர்தலில் கோவை மாவட்டத்தில் உள்ள பத்து தொகுதிகளையும் தட்டித்தூக்கிட வேண்டும் என்று பலவிதமான வியூகங்களை வகுத்து வருகிறார் அவருக்கும் செல்வன் மீது ஒரு கண் இருக்கவே செய்கின்றது என்கின்றனர் மேல்மட்ட நிர்வாகிகள்.


மு.க.ஸ்டாலினுடன் செல்வம்

இது குறித்து செல்வன் என்ன சொல்கிறார், அவரிடமே கேட்டோம் கழகமே கோவில். கலைஞரே தெய்வம் என்று பணியாற்றி கொண்டு, மக்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்து வருகிறேன். அதோடு கட்சி தலைவரும், தன்னிகரில்லா முதல்வரும், இளைஞர்களின் எழுச்சி நாயகனான துணை முதல்வர் மற்றும் பொறுப்பு அமைச்சர் செந்தில் பாலாஜி, மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், நகரச் செயலாளர் சுதாகர், ஒன்றியச் செயலாளர்கள் தேவசேனாதிபதி, யுவராஜ், ஹிமாலயா யுவராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் கோட்டூர் பால்ராஜ், ஆனைமலை டாக்டர் செந்தில் குமார், வேட்டைக்காரன் புதூர் பார்த்திபன், ஒடையகுளம் சோமசுந்தரம் மற்றும் பல நிர்வாகிகள், மூத்த முன்னோடிகளான கோழிக்கடை கணேசன், பால்பாண்டி ஆகியோர் கட்டளைகளிட கட்சிப் பணியாற்றி வருகிறேன். அதோடு 1980 க்கு பிறகு தொடர்ந்து 10 ஆண்டுகள் தி.மு.க ஆட்சி இருந்ததில்லை என்கிற எதிர்க்கட்சிகளின் பிரச்சாரங்களை சுக்கு நூறாக உடைத்து தமிழகத்தில் இரண்டாவது முறையாக தளபதி அரியணை ஏறிட வேண்டும் என்பதையே முழு நேர குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறேன். கட்சி தலைமை கட்டளையிடும் எதையும் அது வேட்பாளராக இருந்தாலும் சரி, வேலையாக இருந்தாலும் சரி, தயக்கமின்றி செய்ய தயாராகவும் இருக்கிறேன் என்று தன்னடக்கத்துடன் தெரிவித்தார் மா செல்வன்.

எனவே, செல்வன் போன்ற தீவிர தொண்டர்களுக்கு கட்சி தலைமை வாய்ப்பு கொடுக்கும் பட்சத்தில் 1996 ல் வால்பாறை தொகுதியில் தி.மு.க மிகப்பெரிய வெற்றி பெற்று புன்னகை அரசன் சிங்காரவேலு சட்டமன்றத்தை அலங்கரித்தது போல, 2026 தேர்தலிலும் தி.மு.க அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. ■

பொள்ளாச்சி | ஜேம்ஸ்

● கோவில் நிலம் மோசடி...

# போராடி மீட்ட அ.தி.மு.க நகர செயலாளர்

# மோசடிக்கு துணை போன அறநிலையதுறை

**கோவை மாவட்டம், சூலூர் வட்டம், பாப்பம்பட்டி பகுதியில் உள்ள ஒரு கோயில் நிர்வாகம் தொடர்பாக சுரேஷ்குமார் என்பவருக்கு சாதகமாக நடவடிக்கை எடுக்க, இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் இந்திரா லஞ்சம்கேட்டாராம். முதல் கட்டமாக ரூபாய் 3 லட்சம், பின்னர் ரூபாய் 2 லட்சம் என லஞ்சம் கேட்ட இந்திரா, இறுதியில் ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பெற சம்மதித்தாராம். லஞ்ச பணத்தை நேரடியாகக் கையில் கொடுக்காமல் பையில் வைக்குமாறு, சுரேஷ்குமாரிடம் அவர் கூறியதாக தெரியவந்துள்ளது.**


இந்நிலையில், முன்கூட்டியே தகவல் அறிந்த லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் மறைவில் கண்காணித்து வந்தனர். அந்த நேரத்தில் காந்திபுரம், பாரதியார்ரோட்டில் உள்ள ஒரு கடை முன் பணம் பரிமாற்றம் நடக்கும் போது, உதவி கமிஷனர் இந்திராவை லஞ்ச ஒழிப்பு போலீஸ் அதிகாரிகள் கையும் களவுமாக பிடித்தனர் ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரம் லஞ்ச பணத்துடன் கைதுசெய்யப்பட்டார். இதை யொட்டி அவரது வீட்டிலும் அலுவலகத்திலும் சோதனை நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து அதிகாரி இந்திரா மீது லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்து அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கோவை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறையில் மேற்படி இந்திரா போன்ற லஞ்ச அதிகாரிகளால், மாவட்டமெங்கும் அதிகளவில் கோவில் நிலங்கள் ஆக்கிரமிப்பு என்ற பெயரில் கொள்ளைபோய் கொண்டிருக்கிறது. அந்த வகையில் கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலும் கோவில் நிலம் தொடர்பான பெரிய மோசடி ஒன்று நடைபெற்று, அது நகர அ.தி.மு.கவினரின் சட்டப் போராட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. அதனை சற்று விரிவாக பார்க்கலாம்.

சுப்ரமணியசாமி கோவில்



பொள்ளாச்சியில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் தேர்முட்டி பகுதியில் உள்ளது. அந்த இடத்தை பொள்ளாச்சி வட்டம் அம்மேகவுண்டனூரைச் சேர்ந்த மளிகை பாஸ்கர், பந்தல் கணேஷ் மற்றும் நகைக்கடை முருகன் ஆகிய மூன்று பேரும், பாஸ்கரின் உறவினராக சொல்லப்படும் மேற்படி இந்து சமய அறநிலையத்துறையில் உதவி கமிஷனராக இருக்கும் ஒரு பெண் அதிகாரியின் உதவியுடன் குத்தகை அடிப்படையில் எடுத்துள்ளனர். அசையும் வகையில் வண்டி வியாபாரம் அல்லது சிறிதளவான தற்காலிக செட் அமைத்து வியாபாரம் செய்வதற்கு அதற்கு மட்டுமே அனுமதி. பெரிய அளவில் கட்டிடங்கள் கட்டுவதோ அல்லது நிரந்தரமாக அசையா வண்ணம் எந்த ஒரு செயலையும் செய்ய கூடாது என்கிற நிபந்தனையுடன் மிகவும் சொற்ப தொகைக்கு மேற்படி கோவில் இடத்தை குத்தகைக்கு எடுத்த மூவரும், அந்த இடத்தில் பிரம்மாண்டமான முறையில் கடைகளைக் கட்டி ஒவ்வொருவரிடமும் ரூபாய் பத்து லட்சம், பதினைந்து லட்சம் என்று பெற்று கொண்டு, அவற்றை வாடகைக்கு விட்டுள்ளனர்.



சேகர் பாபு



கிருஷ்ணகுமார்

இதுகுறித்து கோவில் நிலமோசடி. பிரச்சினையை உயர்நீதிமன்றம் வரை சென்று, சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றவர்களில் ஒருவரும், அ.தி.மு.க நகர்மன்ற உறுப்பினருமான ஜேம்ஸ் ராஜா என்பவர் கூறும்போது, கடந்த அ.தி.மு.க ஆட்சியில் இந்து சமய அறநிலையத் துறை மூலமாக கோவில் நிலங்கள் நன்கு பாதுகாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வந்தன. ஆனால், தற்போதைய ஆட்சியில் அறநிலையத்துறையில், குறிப்பாக கோவை மாவட்ட இந்து சமய அறநிலையத்துறையில் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. அத்துறையில் உதவி கமிஷனராக இருந்த ஒரவரே லஞ்சம் வாங்கி கைது செய்யப்பட்டிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த விஷயத்தில் கூட அதிகளவில் லஞ்சம் விளையாடி உள்ளது. ஆகவே தான், நகரின் முக்கிய பகுதியில் உள்ள கோவில் நிலத்தில் இவ்வளவு பெரிய கட்டிடங்களை துணிச்சலாக கட்டியுள்ளனர். இதற்கான அனுமதி யாரிடம் பெறப்பட்டது என்று நகராட்சி மற்றும் இந்து சமய அறநிலையத் துறையில் நேரடியாகவும் ஆர்.டி.ஐ மூலமாகவும் என, பலவழிகளில் தகவல் கேட்டு பார்த்தோம்.




கோவிலுக்கு சொந்தமான இடம்

ஆனால், ஒருவரும் உருப்படியான பதில் சொல்லாமல் மழுப்பலான பதிலையே கூறினார்கள். இது சரியாகாது என்கிற நிலை வந்தபோது தான், எங்கள் நகரச் செயலாளரும், முன்னாள் நகர்மன்ற தலைவருமான கிருஷ்ணகுமார் அறிவுறுத்தலின்படி எங்கள் கட்சிக்காரரான தம்பி சூரியநாராயண் பேரில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேற்படி கோவில் நில மோசடிக்கு எதிராக தகுந்த ஆதாரங்களுடன்

வழக்குத் தொடர்ந்தோம்.அந்த வழக்கில் தற்போது மேற்படி கோவில் நிலத்தில் உள்ள கட்டிடங்களை எட்டு வாரத்திற்குள் முழுவதுமாக இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்று உயர் நீதிமன்ற உத்தரவை பெற்றுள்ளோம்.மேற்படி ஆக்கிரமிப்பாளர்கள் மேல்முறையீடு செய்தால் அதனையும் எங்களின் சட்டப் போராட்டத்தின் மூலம் முறியடித்து வெற்றி காண்போம் என்று தீர்க்கமாக கூறி முடித்தார்.



ஆணையர் ஸ்ரீதர்

கவுன்சிலர் ஜேம்ஸ் ராஜா கூறும்போது,



ஜேம்ஸ் ராஜா

நமது கேள்வியெல்லாம் கோவில் நிலம் என்று தெரிந்தும் அதற்கு மின் இணைப்பு எப்படி கொடுக்கப்பட்டது ? நிபந்தனையுடன் இடத்தை கொடுத்த அறநிலையத்துறை அது மீறப்படும் பொழுது தடுக்காதது ஏன்.? சம்மந்தப்பட்ட இடத்தில் இவ்வளவு பெரிய வணிக வளாகம் கட்டுகிற வரை பொள்ளாச்சி நகராட்சி நிர்வாகமும், சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாகமும் தூங்கி கொண்டு இருந்தனவா.? சின்னஞ்சிறு பிரச்சினைகளுக்கெல்லாம் கொடி பிடிக்கும் இந்து அமைப்புகள் இவ்வளவு பெரிய மோசடியை கண்டு கொள்ளாமல் இருந்தது ஏன்.? போன்ற பல்வேறு கேள்விகளுக்கு மாநில இந்து சமய அறநிலையத்துறை இயக்குநரும், துறை அமைச்சரான சேகர் பாபுவும் தான் பதில் கூற வேண்டும்.

அதோடு, தொடர்ந்து கோவில் நிலங்கள் கொள்ளை போவதை பணத்திற்காக நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்க்கும் பொள்ளாச்சி சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாக அதிகாரிகள், ஊழியர்கள் என அனைவரையும் கூண்டோடு மாற்றம் செய்ய வேண்டும். தவிர பொள்ளாச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஏராளமான கோவில் நிலங்கள் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்து வருகிறது. பல ஏக்கர் கோவில் நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அந்த வழக்குகள் நீதிமன்றங்களில் பல வருடங்களாக உறங்கிக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் முறையாக கையாண்டு, கோவில் நிலங்களை அதிரடியாக இந்த அரசு மீட்குமானால் பக்தர்கள் மட்டுமன்றி பலதரப்பட்ட மக்களும் தமிழக அரசை கொண்டாடுவார்கள். செய்யுமா இந்த அரசு.? பொறுத்திருந்து பார்ப்போம்...! ■


பரபரப்பு செய்தி

வெளியிட்டாளர்
& ஆசிரியர்
**S.P.இராமநாதன்**
**99405 14136**

இணையாசிரியர்
**ஜோதி சங்கர் .A**
**9444703555**

பொறுப்பாசிரியர்
**நா.இராதாகிருஷ்ணன்**

நிருபர்கள்
**ஜேம்ஸ் நெப்போலியன்**
**இராமநாதபுரம் முஸ்தபா**
**பொங்கு செல்வம்**
**தனசேகர்**
**திண்டுக்கல் குமார்**
**V.சங்கர்,**
**V.செல்வநாயகம்**
**K.மணிகண்டன்,**
**குமரிமைந்தன், பாக்யா,**
**வெங்கடேஷ்**

வடிவமைப்பு
**த.கோபாலகிருஷ்ணன்**

நிர்வாக அலுவலகம்
**கதவு எண்: 7/31, A - பிளாக்,**
**நெ.69, கிரிஸ்டல் கோர்ட்,**
**அண்ணா நகர்**
**சென்னை - 600 101**

தொடர்புக்கு
**044 - 26150095**

மின்னஞ்சல்
paraparappuseithiweekly@gmail.com

www.paraparappucheithi.com
paraparappucheithi
paraparappucheithi

அரசியல்

வீரதீர பராக்கிரமன்

# தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு..!

## ❖ ரிசர்வ் தொகுதிகள் பொதுத் தொகுதிகளாக மாற்றப்படுமா?

**கடந்த 50 ஆண்டுகாலமாக தென்காசி மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி ரிசர்வ் தொகுதியாகவே இருக்கிறது. அதற்கு பக்கத்து தொகுதியான வாசுதேவநல்லூர் தொகுதியும் தனிதொகுதியாகவே இருக்கிறது.**










இந்த சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவ நல்லூர் தொகுதிக்குட்பட்ட இரண்டு ச.ம. தொகுதிகளையும் உள்ளடக்கிய தென்காசி பாராளுமன்ற தொகுதியும் ரிசர்வ் தொகுதியாகவே நீண்ட காலமாக இருந்து வருகிறது. இம்மூன்று தொகுதிகளும் ஒரே மாவட்டத்தில் ரிசர்வ் தொகுதிகளாகவே இருப்பது தேர்தல் ஆணையத்திற்கு தெரியாமலா இருக்கும்? என்று பொதுமக்கள் நீண்ட காலமாக கேட்டு வருகிறார்கள்.

அதே போல் தென்காசி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியும் ரிசர்வ் தொகுதியாகவே இருந்து வருகிறது. பத்து ஆண்டுகளுக்கொருமுறை ரிசர்வ் தொகுதிகளை பொதுத்தொகுதியாக மாற்ற வேண்டும். ஆனால் என்ன காரணத்தாலோ ஒரே மாவட்டத்தில் உள்ள இந்த 3 தொகுதிகளும் பொதுத்தொகுதியாக மாற்றப்படவில்லை.

இதன் காரணத்தை தேர்தல் ஆணையம் தெரிவிப்பதுடன் உடனடியாக தொகுதி மறுவரையறை செய்து இந்த 3 தொகுதிகளையும் பொது தொகுதிகளாக மாற்றியமைத்து அறிவிப்பை வெளியிட வேண்டும்.

அதே சமயத்தில் நெடுங்காலமாக தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியும், விளாத்திகுளம் தொகுதியும் திருச்செந்தூர் தொகுதியும் ரிசர்வ் தொகுதிகளாக மாற்றப்படவில்லை.

மாறாக ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியும் நீண்ட காலமாக ரிசர்வ் தொகுதியாகவே இருக்கிறது. எனவே ஓட்டப்பிடாரம் தொகுதியையும் வெகுவிரைவில் பொதுத்தொகுதியாக மாற்றியமைக்க வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.

அதே போல் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் சட்டமன்ற தொகுதிகளில் ஏதாவது ஒன்றை விரைவில் தனித்தொகுதிகளாக மாற்றியமைத்திட்டால்தான் ஒரு சமத்துவம் கிடைக்கும் என்றும் மற்றவர்களுக்கும் இன்னொரு வாய்ப்பும் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறார்கள்.

தேர்தல் ஆணையம் இதுகுறித்து தீவிரமாக பரிசீலித்து விரைவில் பணிகளை முடுக்கி விட்டு மாற்றங்களை உருவாக்குவது அவசர, அவசியம்! ■

விழுப்புரம் | இரா.யுவபாரதி

## கல்குவாரி உரிமையாளர் அராஜகம்...

# திறந்த வெளி சிறையில் விவசாய குடும்பம்..!

### ● இப்படியும் நடக்குமா..?

தமிழ்நாட்டில் விவசாய நிலங்களுக்கு மத்தியில் கல் குவாரிகள் அமைக்க ஆட்சியாளர்கள் தொடர்ந்து அனுமதித்து வருகிறார்கள்.

அப்படி அனுமதிக்கப் பட்டவர்கள் அங்கிருக்கும் மலைகளை மொட்டை அடித்து கிரஷர் அமைத்து பெரும் இயந்திரங்களைக் கொண்டு எம்.சாண்ட் உருவாக்குவதன் மூலம் சுற்றிலும் உள்ள விவசாய நிலங்களை பாழ்படுத்தி வருகிறார்கள்.

பாரம்பரியமாக விவசாயத்தை மட்டுமே பிழைப்பாக கொண்டு வாழ்க்கை நடத்தி வரும் சிறு விவசாயிகள் இது குறித்து எவ்வளவு புகார்களை தந்தாலும் அரசு நிர்வாகம் அசைந்து கொடுப்பதில்லை. மாவட்ட ஆட்சியர்கள் மவுனித்து விடுகிறார்கள். காவல்துறையும் கண்களை மூடி, வாயை பொத்தி, கைகட்டிக் கொள்கிறது. இது எந்த அளவுக்கு கல் குவாரி முதலாளிகள் ஆட்சியாளர்களையும், அரசு நிர்வாக இயந்திரத்தையும் கரப்ஷன் பண்ணி வைத்திருக்கிறார்கள் என்பதற்கான அத்தாட்சிதான், ஏழை விவாசாயி செல்வம் குடும்பத்தின் நிலைமை.

கல்குவாரிகள் வைத்திருப்பவர்கள் தான் தமிழக அரசையே ஆட்டிப் படைக்கிறார்களா.? கல்குவாரிக்கு நிலம் தர மறுத்த விவசாயி செல்வம் குடும்பமே சுற்றிலும் இரும்பு முள்வேலி அமைத்து சிறை வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்திற்கு அனுப்பட்ட எந்த புகாருக்கும் பலனில்லையாம்.

தமிழ்நாட்டில் விவசாய நிலங்களுக்கு மத்தியில் கல் குவாரிகள் அமைக்க ஆட்சியாளர்கள் தொடர்ந்து அனுமதித்து வருகிறார்கள். குறிப்பாக அமைச்சர் துரைமுருகன் இதில் அனைத்து சட்ட விதிமுறைகளையும் மீறி ஆர்வம் காட்டி வருகிறார்.


முள் வேலிக்குள் செல்வம் குடும்பத்தினர்





ஆட்சியர் ஷேக்அப்துல் ரஹ்மான்

அப்படி அனுமதிக்கப் பட்டவர்கள் அங்கிருக்கும் மலைகளை மொட்டை அடித்து கிரஷர் அமைத்து பெரும் இயந்திரங்களைக் கொண்டு எம்.சாண்ட் உருவாக்குவதன் மூலம் சுற்றிலும் உள்ள விவசாய நிலங்களை பாழ்படுத்திவிடுகிறார்கள். நீர் நிலைகளையும் சீரழித்துவிடுகிறார்கள். இந்த இயற்கை சூறையாடல் வரைமுறையின்றி அரங்கேறுகிறது.

பாரம்பரியமாக விவசாயத்தை மட்டுமே பிழைப்பாக கொண்டுள்ள சிறு விவசாயிகள் இது குறித்து எவ்வளவு புகார்களை தந்தாலும் அரசு நிர்வாகம் அசைந்து கொடுப்பதில்லை.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுக்காவில் உள்ளது நல்முக்கால் கிராமம். இந்த கிரமத்தில் செல்வம் என்ற விவசாயி ஏழு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்கிறார். இங்கு மூன்று தலைமுறைகளாக வாழும் குடும்பமாகும் செல்வத்தின் குடும்பம்.

செல்வத்தின் விவசாய நிலத்திற்கு அருகில் ஒருவர் கல்குவாரி மற்றும் கிரஷர் ஆரம்பித்த நிலையில், காலப் போக்கில் சுற்றிலும் உள்ள விவசாய நிலங்கள் சீர்குலைகுலைந்தன. சுற்றிலும் விவசாயம் செய்து வந்தவர்கள் விவசாயத்தை விட வேண்டிய நிலையில் அவர்களை நிர்பந்தித்து அனைத்து நிலங்களையும் கூடுதல் விலை கொடுத்து வாங்கிவிட்டார் கிரஷர் உரிமையாளர்.

ஆனால், செல்வத்தின் குடும்பமோ, எங்களுக்கு போக்கிடம் வேறில்லை. ஐயா எங்களை வாழவிடுங்கள் எனச் சொல்லி வாழ்ந்து வருகிறது.

ஆனால், குவாரி, கிரஷர்களின் முதலாளியோ குண்டர்களை வைத்து மிரட்டியும் செல்வம் ஒத்துவராததால், அவர்கள் நிலத்தை சுற்றி இந்த குடும்பம் வெளியேற முடியாதவாறு முள்கம்பி வேலி போட்டு விட்டார் குவாரி உரிமையாளர்.

அதனால் செல்லம் குடும்பத்தினர் அங்கிருந்து வெளியேற முடியவில்லை. குழந்தைகள் பள்ளிக் கூடம் செல்ல முடியவில்லை. பெரியவர்கள் கடைகளுக்கோ, மருத்துவமனைக்கோ செல்ல முடியாமல் அடைபட்டுள்ளனர்.

அதாவது தனக்கு தரப்படாத நிலத்தை திறந்தவெளிச் சிறைசாலையாக மாற்றி விட்டார் கல்குவாரி முதலாளி.!

இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறையினருக்கு அனுப்பிய புகார்கள் எதற்கும் பலனில்லை. அடேய், நான் பரமசிவம் கழுத்து பாம்புடா. என்னை ஒன்றும் செய்ய முடியாதுஎன கொக்கரிக்கிறாராம் கிரஷர் உரிமையாளர்.

செல்வத்தை போன்ற ஏழை விவசாயிகள் அரசிடம் எந்த சலுகையையும் எதிர்பார்க்கவில்லை. தாங்கள் வாழும் உரிமையை அரசு அங்கீகரித்தாலே போதும் என எதிர்பார்க்கிறார்கள். அந்த வாழும் உரிமையை தட்டிப் பறித்து அச்சுறுத்த ஒரு சிலதனி நபர்களால் முடியும் என்றால், அதை தடுக்க அரசு நிர்வாகத்தால் இயலாது என்றால்.., என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

எனவே, விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக்அப்துல் ரஹ்மான் மூல மாவது செல்வம் குடும்பத்தின் திறந்தவெளி சிறைக்கு விடிவு கிடைக்குமா? பொருத்திருந்து பார்ப்போம். ■

## முக்குலத்தோர் வாக்கு...

# விஜய் போடும் கணக்கு..! உற்சாகத்தில் ஓ.பி.எஸ்..!



**'அலெர்ட்' ஆறுமுகம்**

**ஓட்டத் தெரியாத விமானியை வைத்து கடத்தத் தெரியாதவன், விமானத்தை பாழுங்கிணற்றில் கவிழ்த்த கதையாகப் போகிறது அமித்ஷா – எடப்பாடி கூட்டணி என வந்தமர்ந்தார் அலெர்ட்டார். பீடிகை எல்லாம் பலமாக இருக்கிறதே... 10 தோல்வி கண்ட எடப்பாடி பழனிசாமி, 11வது தோல்வி நோக்கி தவழ்கிறாரா.? எனக் கேட்டதும் டேபிளில் வைக்கப்பட்டு இருந்த அவலை அள்ளிச் சுவத்தபடி எடப்பாடியாரின் கூட்டணி பரிதாபங்களை பகிர்ந்தார் அலெர்ட்டார்.**

எடப்பாடி பழனிசாமி மகன் மிதுன் டீம் விஜய் தரப்புடன் தொடர்பில் இருந்து வருகிறது. மற்றொரு புறம் ஓ.பி.எஸ் மகன் ரவீந்திரநாத்தும் விஜய் தரப்புடன் தொடர்பில் இருந்து வருகிறார்கள். அதையொட்டியே ஓ.பி.எஸ் அணியின் முன்னாள் அமைச்சரான பண்ருட்டி ராமச்சந்திரன், த.வெ.கவோடு ஓ.பி.எஸ் அணி கூட்டணி சேர வேண்டும். அதனால் தென் மாவட்டங்கள் முழுவதும் நாம் பிரம்மாண்டமான வெற்றி பெற முடியும் என்றெல்லாம் ஓப்பனாகவே ஸ்டேட்மென்ட் கொடுத்திருந்தார்.

பா.ஜ.கவோடு கூட்டணியில் இருப்பதால் அ.தி.மு.க கூட்டணில த.வெ.க எப்பொழுதுமே இணையாது. பா.ஜ.கவை விட்டுட்டு எடப்பாடி விஜய்யுடன் வருவாரா? என்கிற சந்தேகம் இருந்தது. அப்படியே வந்தாலும் முதலமைச்சர் வேட்பாளர் விஜய்தான் என கறாரக இருக்கிறது த.வெ.க தரப்பு. அதை எடப்பாடி ஏற்றுக் கொள்ள மாட்டார். ஆகையால்,



ஓ.பி.எஸ்.



விஜய்

எடப்பாடி பழனிசாமி மதில் மேல் பூனையாய் இன்னும் முடிவு செய்ய முடியாமல், உறுதியாக சொல்ல முடியாமல் தவிக்கிறார். அதே நேரத்தில் த.வெ.க மீது கூடுதல் கவனம் ஓ.பி.எஸ் தரப்பில் இருந்து வருகிறது. அதற்கு காரணங்களும் இல்லாமல் இல்லை.

ஓ.பி.எஸ் அ.தி.மு.கவில் இருந்தும் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார். பா.ஜ.கவும் அவருக்கு உரிய மரியாதை கொடுக்காததால், பா.ஜ.க கூட்டணிய விட்டும் அதிரடியாக வெளியேறி இருக்கிறார். அவரோடு மட்டும் இல்லாமல் சசிகலா, டி.டி.வி.தினகரனையும் அ.தி.மு.க புறக்கணித்து இருக்கிறது. இவர்களுக்கு பெரிய முக்கியத்துவத்தை பா.ஜ.க கொடுப்பது இல்லை. அவர்களை புறக்கணித்திருப்பது அவர்கள் சார்ந்த முக்குலத்தோர் சமூகத்தையும் புறக்கணிப்பதாகவே அந்த சமூகத்தைச் சேர்ந்த பெரும்பான்மை மக்கள் நினைப்பதாக ரிப்போர்ட்களும்

வந்து கொண்டு இருக்கிறது.

ஓ.பி.எஸ்ஸை புறக்கணித்ததால் கிட்டத்தட்ட தென்மாவட்டங்கள், தென்கிழக்கு மாவட்டங்களில் 80க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக 58 தொகுதிகளில் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும். டெல்டா மாவட்டங்கள், ராமநாதபுரம், தேனி பகுதிகளில் பெரிய அளவில் சேதாரங்களை அ.தி.மு.கவும், பா.ஜ.க.வும் சந்திக்கலாம். இன்னும் சொல்லப்போனால் முந்தைய மக்களவைத் தேர்தலில், ராமநாதபுரம் தொகுதியில் 3 லட்சத்து 42 ஆயிரத்து 822 வாக்குகளை ஓ.பி.எஸ் பெற்று அ.தி.மு.கவை பின்னுக்கு தள்ளி, இரண்டாவது இடத்தைப் பிடித்தார். இதையெல்லாம் புரிந்தே வைத்திருக்கிறது த.வெ.க தரப்பு.

முக்குலத்தோர் சமூகத்தின் வாக்காளர்கள் பெரும்பாலோனோர் அ.தி.மு.க மீது வருத்தத்தில் இருக்கிறார்கள். இன்னொரு பக்கம், அ.தி.மு.க தொண்டர்களாக இருக்கக்கூடிய அந்த சமுதாய மக்கள் பெரும்பான்மையானவர்கள், நேரடி எதிரியான தி.மு.கவுக்கு வாக்கு செலுத்தவும் வாய்ப்புகள் ரொம்பவே குறைவு, விரும்பவும் மாட்டார்கள். அந்த வாக்குகளை பயனுள்ளதாக மாற்றியாக வேண்டும் என்றால் ஓ.பி.எஸ் உள்ளிட்ட புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு கொடுப்பதன் மூலம் அவர்களை நெருக்கமாக வைத்து ஒட்டுமொத்தமாக அந்த வாக்குகளை அறுவடை செய்யலாம் என ஒரு திட்டமும் விஜய் தரப்புக்கு உள்ளது.

ஓ.பி.எஸ் ஏற்கனவே முதலமைச்சராக இருந்தவர். அரசியல் அனுபவமும் இருக்கிறது. இப்படி பல கணக்குகளையும் போட்டபடி இருக்கிறது த.வெ.க. 1957க்கு பிறகு முக்குலத்தோர் சமூகம் காங்கிரஸை மொத்தமாக புறக்கணித்தது. அதன் பிறகு காங்கிரஸ், திராவிட கட்சிகளோடு இணைந்தே சவாரி செய்ய முடிந்தது. அதேபோல அ.தி.மு.க புறக்கணித்து அப்புறப்படுத்தும் தேர்தலாக இது அமைய வேண்டும் என நினைக்கிறார்கள். ஓ.பி.எஸ் உள்ளிட்ட முக்குலத்தோர் முகங்களை மொத்தமாக புறக்கணித்து விட்டார் எடப்பாடியார். ஆகையால், அந்த வாக்குகளை முழுமையாக அறுவடை செய்ய வேண்டும் என நினைக்கிறார் விஜய். ஏற்கனவே அவர் சொன்னது போல த.வெ.க தி.மு.க என்கிற களத்தை தேர்தலில் உருவாக்குவதை நோக்கி விஜய் வேகமாக முன்னேறிக் கொண்டு இருக்கிறார் என்ற அலெர்ட்டாரிடம் கமலை வைத்து ஸ்டாலின், கனிமொழிக்கு செக் வைப்பதாக புகைச்சல் கிளம்புகிறதே... மேட்டர் உண்மைதானா? எனக் கேட்டோம்.



பண்ருட்டி ராமசந்திரன்



எடப்பாடி பழனிசாமி



கனிமொழி

தி.மு.க தலைமையின் ஆதரவோடுதான் கமல், பிரதமர் மோடியை சந்தித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தச் சந்திப்பு கொடுக்கக்கூடிய பொலிட்டிக்கல் மெசேஜை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். டெல்லியில், தி.மு.கவின் முகமாக கனிமொழி இருந்து வருகிறார். இப்போது கமலுக்கு புதிதாக கிடைக்கக்கூடிய ஊடக வெளிச்சம் கனிமொழிக்கு பிடிக்கவில்லை. கமல் பிரதமரை சந்தித்த போட்டோ வெளிவந்தது. அடுத்த நாளே கனிமொழி, மோடியை சந்தித்து, அதே போன்ற புகைப்படத்தை வெளியிடுகிறார். இதன் மூலம் தி.மு.கவில் என்ன அரசியல் நடக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

தி.மு.கவின் இந்த அரசியலில் மோடியும் நன்றாக விளையாடுகிறார். சிந்தூர் ஆப்ரேஷன் குறித்து விளக்குவதற்கு மிக முக்கியமான நாடுகளான ரஷ்யா, ஸ்பெயின் போன்ற நாடுகளுக்கு அமைக்கப்பட்ட எம்.பிக்கள் குழுவின் தலைவராக கனிமொழியை அனுப்பினார் மோடி. இந்தியாவின் வெளியுறவுத்துறையை அப்படியே கரைத்துக் குடித்தவரோ அல்லது சர்வதேச விவகாரங்களில் கற்றுத் தேர்ந்தவரோ இல்லை கனிமொழி. அது தி.மு.க தலைமையை உசுப்பேறுவதற்காக மோடி செய்த விளையாட்டு என்கிறார்கள். கனிமொழி செல்வதை ஸ்டாலின் தடுக்கவில்லை. கனிமொழிக்கு இந்த அங்கீகாரத்தை கொடுத்தது மோடிக்கு இருக்கும் பெருந்தன்மை எல்லாம் கிடையாது.

தி.மு.கவிற்குள் கனிமொழிக்கும், ஸ்டாலினுக்கும் ஒரு பனிப்போர் நடந்து வருகிறது. தி.மு.கவில் தனக்கு கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை. உதயநிதி வருகைக்குப்பின் கனிமொழி தன்னுடைய எதிர்காலம் குறித்து சந்தேகப்படுகிறார். தென் மாவட்டங்களில் தி.மு.கவில் கனிமொழிக்கு இருக்கிற செல்வாக்கை ஸ்டாலின் தடுக்க வேண்டும் என்கிற கூடுதல் எச்சரிக்கையுடன் ஸ்டாலின் இருக்கிறார். அதே நேரத்தில் முரசொலி மாறன் போல டெல்லியில் கனிமொழி உருவாவதையும் ஸ்டாலின் விரும்பவில்லை. அதற்காக செக் வைக்க சில காரியங்களை ஸ்டாலின் செய்து கொண்டே தான் இருப்பார். அதில் ஒன்றுதான் தற்போது கமலஹாசனுக்கு முக்கியத்துவம் என நிறுத்திய அலெர்ட்டாருக்கு மாம்பழ ஜூஸ் கொடுத்தோம்.



கமல்



ராமதாஸ்

பா.ம.க மேட்டரை போட்டு வாங்குவதற்காக மாம்பழசாறா..? பலே... என ஜூஸை பருகியபடி ராமதாஸின் அடுத்த கட்ட மூவை விளக்கினார் அலெர்ட்டார். ஆகஸ்ட் 17ஆம் தேதி நடக்கும் பொதுக்குழு கூட்டத்தில், ராமதாஸின் மகள் காந்திமதி மகன்களான முகுந்தன் மீண்டும் இளைஞரணி தலைவராக அறிவிக்கப்பட உள்ளார். அத்தோடு முகுந்தனின் இன்னொரு உடன் பிறந்த சகோதரரான சுகந்தனுக்கும் முக்கியப் பொறுப்பை அறிவிக்கப் போகிறார் ராமதாஸ். கொஞ்ச நாளைக்கு முன்பு காந்திமதியை மேடையில் உட்கார வைத்திருந்தார் ராமதாஸ். இது குறித்து அவரிடம் கேட்டபோது, போகப் போக தெரியும்.. எனப் பாட்டுப்பாடி கலகலப்பூட்டினார். அதற்கு அர்த்தம் முகுந்தனுக்கு இளைஞர் அணி தலைவர் பதவி. சுகந்தனுக்கு முக்கிய பதவி கொடுக்கப் போகிறார்.

அன்புமணி உனது மனைவிக்கு எம்.பி சீட் கொடுத்தாய். உன் மகள்களை மேடையில் ஏற்றி வைத்து மாநாடு நடத்தினாய். நான் முகுந்தன், சுகந்தனை பொறுப்புக்கு கொண்டு வருகிறேன் என்பதில் தீவிரமாக இருக்கிறார். இதனால் குடும்பத்தில் இன்னும் சண்டை கடுமையாக நடக்கலாம், அதன் விளைவுகள் மோசமாக இருக்கலாம். பிரச்சினை எப்படி போய் முடியும் என்பதே தெரியாது என புதிர் போட்ட அலெர்ட்டாரிடம், எம்.ஜி.ஆர் பற்றி வி.சி.க திருமாவளவனும், வன்னி அரசும் கடுமையாக விமர்சித்துள்ளனரே... எனக் கேட்டதும், அந்த பரிதாப ஜீவன்களுக்கு தெரியாது. எம்.ஜி.ஆர் அடிப்படையில் காங்கிரஸ் அபிமானி. 1952 முதல் தி.மு.கவில் இணைந்து, அறிஞர் அண்ணாவில் தலைமையேற்றவர். 1957, 1962, 1967, 1971 என நான்கு சட்டமன்றத் தேர்தல்களுக்கு தி.மு.கவுக்காக தமிழக முழுவதும் சூறாவளி பிரச்சாரம் செய்து வெற்றிகளுக்கு வித்திட்டவர்.

1967ல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக வர முதலமைச்சராவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர். ஏனெனில், அவர் ஒரு பழுத்த அரசியல்வாதி. 1962ல் பேரறிஞர் அண்ணாவால் சட்ட மேலவை உறுப்பினர் (MLC) ஆக்கப்பட்டவர். 1967, 1971 இரு சட்டமன்ற தேர்தலில் தி.மு.க எம்.எல்.ஏ வாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். தி.மு.க பொருளாளர் என்று கட்சி அளவில் உயர்ந்தவர். தனிக்கட்சி கண்டவர்.

முதல் இடைத்தேர்தலிலே ஆளுங்கட்சியை தூக்கி மூன்றாவது இடத்திற்கு வீசியவர். பக்கத்து மாநிலம் புதுவையில் முதன்முறையாக தனது கட்சியை ஆட்சியிலேயே அமர்த்தியவர். தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்து தொடர்ந்து மூன்று முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே தலைவன் என்ற பெருமையை இன்று வரை கொண்டிருப்பவர். சாதி, மதம் பார்க்காமல், தினக்கூலி உள்ளிட்ட சாமானியர்களை எல்லாம் சட்டப்பேரவைக்கும் நுழைய வைத்தவர். பசியிலிருந்து மீண்டு, நடிப்புத் தொழிலில் சாதனைகள் படைத்து, அரசியல் மூலம் கோட்டைக்கு ஏறி, பள்ளிக்கல்வி மறுமலர்ச்சி காண வைத்தவர். பல பல்கலைக்கழகங்களை உருவாக்கி, உயர் கல்விக்கு வித்திட்டவர்.

பல சமூக நலத் திட்டங்களுக்கு முன்னோடியாக திகழ்பவர். இட ஒதுக்கீட்டில் பெரும் பங்களிப்பு செய்தவர். அவரை வெறும் நடிகர் என்று சொன்னவர்கள் முக்காடு போட்டு மூளையில் முட்டிக் கொண்டு கதறத்தான் முடிந்தது. தான் இருந்த கட்சியை ஜெயிக்க வைக்கவும் அவரால் முடிந்தது. தன்னை தூக்கிப் போட்ட கட்சியைத்தான் இருக்கும் வரை நிமிரவே முடியாமலும் செய்ய முடிந்தது. 40 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட அரசியல் அனுபவம் அவருக்கு. அவர் மரணம்கூட அரசியல்

எதிரிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் ஒரு தானமாகத்தான் மாறியது. அப்படியொரு தர்மத்தின் தலைவன்.

ஒடுக்கப்பட்டோரை மத்திய அமைச்சராக்கிய எம்.ஜி.ஆர் கொள்கை, கோட்பாடு இல்லாதவரா..? 1971 தேர்தலில் வெற்றி பெற்ற முதல்வரான கலைஞர் பட்டியல் சமூக மக்கள் நலனில் பாரபட்சம் காட்டுகிறார் என்ற குற்றஞ் சாட்டுடன் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தி.மு.கவிலிருந்து 1974ல் விலகினார் சத்தியவாணிமுத்து.

1974ல் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம் என்ற கட்சியைத் தொடங்கினார். 1977ல் அ.தி.மு.கவில் தனது கட்சியை இணைத்தார். அ.தி.மு.க சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக ஆக்கப்பட்டு 1979ல் பிரதமர் சரண் சிங்கின் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக பதவி வகித்தார். முதன்முதல் மத்திய அமைச்சரவையில் இடம் பெற்ற காங்கிரசல்லாத திராவிட கட்சியைச் சேர்ந்த தமிழ்நாட்டு அரசியல் தலைவரில் சத்தியவாணிமுத்தும் ஒருவர்.

தி.மு.கவில் நீங்கள் உட்கார இருக்கையே பிளாஸ்டிக்கில்.. இப்படி இருக்கையில் எம்.ஜி.ஆரைப் பற்றி அவர்கள் இப்படி பேசுவதற்கு யோக்கிதையே இல்லை என அங்கலாய்த்தவர், நமது ஆபீஸில் பிளாஸ்டிக் சேரை எல்லாம் ஓரம் கட்டிவிட்டு சோபா செட் போடச்சொல்லுங்களேன். கொஞ்சம் சௌகர்யமா இருக்கும் எனச் சொல்லிவிட்டு விருட்டென நடையைக்கட்டினார் அலெர்ட்டார். ■

அருப்புக்கோட்டை | செயலாளன்

# குண்டுங்குழியுமான சாலைகள்!

# அருப்புக்கோட்டையில் நடக்குமா வேலைகள்?

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை சிவன்கோவில் தெப்பத்தின் அருகே உள்ள எஸ்.பி.கே. தொடக்கப்பள்ளியிலிருந்து பூக்கடை பஜார் வரை சாலைகள் தோண்டப்பட்டு, குண்டுங்குழியுமாக கிடக்கிறது. கல்லும் மண்ணுமாக இருப்பதால் வாகனங்களின் டயர்கள் பஞ்சராகிறது.

இது பள்ளி மாணவ, மாணவியர் அடிக்கடி பயன்படுத்தும் சாலை என்பதால் மிகவும் அதிகமான அக்கறை தேவைப்படுகிறது. சிறு குழந்தைகளின் பாதுகாப்பு அதிமுக்கியம். இப்பகுதிகளில் அடிக்கடி சிறுசிறு விபத்துக்கள் ஏற்பட்டு சண்டை சச்சரவுகள் தொடர்கிறது.

மேலும் அருப்புக்கோட்டை மகாராணி தியேட்டர் எதிரே உள்ள ரயில்வே ஃபீடர் சாலை நொடிகளாய்,பள்ளங்களாய் காட்சியளிக்கிறது. இதனால் வாகன ஓட்டிகள் முதுகெலும்பு சேதமடைகிறது. நீண்ட நாட்களாக இச்சாலை போடப்படவில்லை.

இது தவிர, ரெயில்வே ஃபீடர் ரோட்டிலிருந்து ஏ.என்.யூ.டி. திருமண மண்டபத்திற்கு சிறிது தூரம்முன் வரை பேவர் பிளாக் ரோடு உள்ளது. ஆனால் அதிலிருந்து தெப்பக்குளம் வரை ஃபேவர் பிளாக் சாலை "பிளாக்" செய்யப்பட்டுள்ளது. ஏனிந்த பாரபட்சம் எனத்தெரியவில்லை.

எனவே நகராட்சி நிர்வாகமும் மாவட்ட நிர்வாகமும் ஓட்டு கேட்டு வரப்போகும் ஆளுங்கட்சியினரும் உடனடியாக இச்சாலைகள் விஷயத்தில் தலையிட்டு புதிய சாலைகள் அமைக்கப்படவேண்டும்.

மழைக்காலம் வேறு வரவிருப்பதால் பல்வேறு விதமான விபத்துக்களை தடுக்கும் பொருட்டு சாலைகள் உடனடியாக போடப்பட வேண்டுமென்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.





திருப்பூர்



நமது நிருபர்

பிடிபட்ட மண் கடத்தல் லாரிகள்

# தடுக்க முடியாத மண் கடத்தல்... தண்ணிகாட்டும் கடத்தல் மன்னன்..!

**திருப்பூர் மாவட்டம், குண்டடம் அருகே ஜோதியாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் கோவிந்தசாமி கவுண்டர் மகன் ஜே.ஜி.எஸ் என்ற அழைக்கப்படும் சண்முகசுந்தரம்.**

எத்தனை முறை மண் கடத்தல் வழக்கு பதிவு செய்தாலும் தொடர்ந்து மண் கடத்தலில் ஈடுபட்டு வருவதாகவும், கடந்த 4.8.2025 அன்று , அவிநாசி பாளையம் காவல் நிலையத்தின் எல்லையில் வழக்கமான வாகன சோதனையின் போது மண் கடத்தல் மன்னன் சண்முகசுந்தரத்தின் டிப்பர் லாரி எண் TN39 CS 8335 எவ்வித அரசு அனுமதி இன்றி 4 யூனிட் கிராவல் மண் கடத்தி வரும் பொழுது கையும் களவுமாக பிடிபட்டது . இதில் முதல் குற்றவாளியாக டாரஸ் லாரியின் உரிமையாளர் சண்முகசுந்தரமும், இரண்டாவது குற்றவாளியாக வாகனம் ஓட்டி வந்த கொடுவாய் பகுதியை சேர்ந்த டிரைவர் கார்த்தி ஆகியோர் பெயரில் எப்.ஐ.ஆர் எண் 403/2025 ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு, கனிம லோடு உடன் டிப்பர் லாரியை அவிநாசி பாளையம் காவல்துறையினர் பறிமுதல் செய்து காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.

ஆனால், அந்த எப்.ஐ .ஆரில், மண் கடத்தல் மன்னன் ஜே.ஜி.எஸ் என்ற சண்முகசுந்தரத்தை காப்பாற்றும் நோக்கில் முதல் குற்றவாளியான சண்முகசுந்தரத்தின் தந்தை பெயர் கோவிந்தசாமி கவுண்டர் என்பதை மாற்றி சின்னச்சாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது,

அவிநாசிபாளையம் காவல் நிலைய லிமிட்டில் மண் கடத்தலில் ரெட் அலர்டில் இருக்கும் கடத்தல் மன்னன் சண்முகசுந்தரத்தின் அப்பா பெயர் தவறாக இருப்பது எப்படி, அடிக்கடி மண் கடத்தலில் சர்வ சாதாரணமாக சிக்கும் சண்முகசுந்தரம் மீது இதே அவிநாசி பாளையம் காவல் நிலையத்தில் பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது .

மேலும், இது குறித்து விசாரித்த போது ஆரம்ப காலம் முதல் தன்னை எளிமையான விவசாயியாக காட்டி கொண்டு, விவசாய நிலத்தை சீர் செய்வதாக கூறிக்கொண்டு டிராக்டர் மூலம் சிறிய அளவில் மண் கடத்தலை தொடங்கியவர்தான் சண்முகசுந்தரம். விவசாய நிலத்தை சமன் செய்வதாக ஊர் மக்களை நம்ப வைத்து விட்டு. குண்டடம் சுற்று பகுதியில் உள்ள கனிமம் மற்றும் மண்களை கடந்த 20 வருடமாக கடத்தி வருகிறார். டிராக்டரில் கடத்தலை தொடங்கிய சண்முக சுந்தரத்திடம் தற்பொழுது பொக்லின், செயின் டோசர், 10 க்கும் மேற்பட்ட டாரஸ் லாரிகள் உள்ளது. மேலும் பினாமிகள் பெயரில் பல டாரஸ் லாரிகள் உள்ளது.

ஜோதியாம்பட்டியில் உள்ள தனது விவசாய நிலத்தில் அளவுக்கு அதிகமாக கனிமம் கடத்திய வழக்கில் சுமார் ரூபாய் ஒரு கோடி அபராதம் விதித்தும், இது நாள் வரை அந்த அபராத தொகை செலுத்தாமல் தொடர்ந்து கனிமம், மண் கடத்தலில் ஈடுபட்டு வருகிறார்.

கனிமம் மற்றும் மண் கடத்தல் மூலம் கோடி கணக்கான பணம் சம்பாதித்த சண்முகசுந்தரம், சட்ட விரோதமாக மண் கடத்தலுக்கு இடைஞ்சலாக இருக்கும் அதிகாரிகளை பல்வேறு வழிகளில் மிரட்டியும், அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தி மேல் இடத்திற்கு புகார் மனுக்கள் அனுப்பியும் தொந்தரவு செய்வது வாடிக்கையாகும் . இரவு நேரங்களில் கிரிமினல் டிரைவர்களுக்கு அதிக தொகை சம்பளம்

கொடுத்து, மது போதையில் டாரஸ் லாரிகளில் அதிவேகத்தில் மண் கடத்துவதும், காவல்துறையினரோ, அதிகாரிகளோ தடுக்க நினைத்தால் உயிர்களுக்கு அச்சுறுத்தும் வகையில் டிரைவர்கள் வாகனத்தை இயக்க உத்தரவிடுவார் என, சண்முகசுந்தரிடம் பணியாற்றிய நபர்கள் அச்சத்துடன் கூறுகிறார்கள்.



சண்முகசுந்தரம்

கடந்த சில வருடங்களாக கனிமம் மற்றும் மண் கடத்தல் சம்பந்தமாக குண்டடம், பல்லடம், அவிநாசி பாளையம், ஊதியூர் உட்பட்ட காவல் நிலையங்களில் ஆறுக்கு மேற்பட்ட கனிமம் கடத்தல் வழக்குகளில் சண்முக சுந்தரத்தின் பெயர் முக்கிய குற்றவாளியாக பதியப்பட்டுள்ளது. ஆனால் பல நேரங்களில் டாரஸ் லாரியின் உரிமையாளர் ஜே.ஜி.எஸ் என்ற சண்முகசுந்தரத்தை வழக்கில் சேர்க்காதபடி லஞ்சம் பெற்றுக் கொண்டு விடுவிக்கப்பட்ட சம்பவம் அதிக அளவில் நடந்துள்ளது. ஒவ்வொரு முறை வழக்கில் சிக்கும் பொழுதும் உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெறும் பொழுது தான் ஒரு அப்பாவி என்றும், முதல் முறையாக தெரியாமல் தவறு நடந்து விட்டது என்றும் கூறி முன் ஜாமின் பெற்று விடுகிறார். காவல்துறையும் இவரது முன்ஜாமீனுக்கு எவ்வித எதிர்ப்பும் தெரிவிப்பதில்லை.

லஞ்சம் வாங்கிக் கொண்டு சில காவல்துறை அதிகாரிகள் செய்த தவறால் இன்று நேர்மையான காவல்துறை அதிகாரிகளுக்கு சவால் விடும் விதமாக வளர்ந்துள்ள சண்முகசுந்தரம், காவல்துறையினரை மிரட்டி தைரியமாக கனிமவளம் மற்றும் மண் கடத்தி வருகிறார்.

அதே போன்று ஜே.ஜி.எஸ் என்ற சண்முகசுந்தரத்தின் தந்தை பெயரான கோவிந்தசாமி கவுண்டர் என்பதை மாற்றி சின்னச்சாமி என்று எஃப்.ஐ.ஆர் பதிவு செய்த உள் நோக்கம் என்ன. ஜே.ஜி.எஸ் என்ற சண்முகசுந்தரத்தை தப்ப விடுவதற்காகவா.? என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எது எப்படியோ கடத்தல் மன்னன் சண்முகசுந்தரம் கனிமம் மற்றும் மண் திருட்டால் கோடிக்கணக்கான பணம் மட்டும் சம்பாதிக்கவில்லை, திருட்டுக்கு உடன்படும் டிரைவர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுத்து அவர்களை ரவுடியாக உருவாக்கி உள்ளார் . தொழிலுக்காக பல்வேறு ரவுடிகளின் தொடர்பையும் விரிவுபடுத்தி உள்ளார். ரவுடி டிரைவர்களை தனது வாகனத்திற்கு டிரைவராக பயன்படுத்தி இரவு நேரங்களில் அதிவேகமாக லாரிகளை இயக்கி அனைவரையும் அச்சுறுத்தி வருகிறார்.

மண் கடத்தல் குறித்து பொதுமக்களோ, சமூக ஆர்வலர்களோ, அதிகாரிகளோ அல்லது காவல்துறையினரோ, நள்ளிரவில் தடுத்து நிறுத்த நினைத்தால் மரணம் உறுதி என்பது போல் செயல்பட்டு வருகிறார் சண்முகசுந்தரம்.

மேலும், தன்னுடைய பணபலம், அடியாள் பலத்தின் மூலம் பலரது நிலத்தை அடிமாட்டு விலைக்கும் வாங்கியும் , ஒப்பந்தம் பதிவு செய்தும் அந்த நிலத்தில் கோடிக்கணக்கான மதிப்புள்ள கனிமம் மற்றும் மண் கடத்தி சாதனை படைத்துள்ளார் சண்முகசுந்தரம்.

அ.தி.மு.க ஆட்சி காலத்தில் அ.தி.மு.க பொறுப்பாளராக இருந்த சண்முகசுந்தரம், தற்பொழுது தி.மு.க ஆட்சி என்பதால் அ.தி.மு.க வில் இருந்து விலகி விட்டதாக காட்டிக் கொண்டு. கனிமம் மற்றும் மண் கடத்தலை மட்டும் கண்ணும் கருத்துமாக செய்து வருகிறார். குண்டடம் சுற்று பகுதியில் இவர்தான் மண் கடத்தலில் முடிசூடா மன்னனாக எப்பொழுதும் உள்ளார்.

எனவே, இத்தனை வழக்கு உள்ள சண்முகசுந்தரம், தொடர்ந்து கனிமம் மற்றும் மண் கடத்தலில் ஈடுபட்டு வருவதை திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரும் , மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் தலையிட்டு சண்முகசுந்தரத்தின் மீது உள்ள வழக்கு வரலாற்றை ஆய்வு செய்து உடனடியாக குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்து , ஓராண்டு வெளியில் வராதபடி ஜெயிலில் அடைத்து கடத்தல் மன்னன் ஜே.ஜி.எஸ் என்கின்றற சண்முகசுந்தரத்தை பற்றி புலன் விசாரணை செய்தால் பல உண்மைகள் வெளிவரும்.

சண்முகசுந்தரத்திற்கும் காவல்துறை மீது சிறிதளவாது பயம் வரும், இல்லை என்றால் உடுமலைப்பேட்டையில் எஸ்.எஸ்.ஐ வெட்டி கொலை செய்தது போல், திருப்பூர் மாவட்டத்தில் மண் கடத்தல் மன்னன் சண்முகசுந்தரத்தால் மற்றொரு சம்பவம் நடக்கலாம் என பீதியுடன் அப்பகுதி பொதுமக்கள் கூறுகிறார்கள்.

என்ன செய்ய போகிறது மாவட்ட நிர்வாகம்? பொதுத்திருந்த பார்ப்போம். ■



தொடர் போராட்டத்தில் தூய்மை பணியாளர்கள்

# “கொரோனாவின் போது தெய்வமாக பார்த்தார்கள்... இப்போது தூக்கிப் போடுகிறார்கள்...”

## ● போராடும் தூய்மை பணியாளர்கள்

**கொரோனா தொற்று காலத்தில் உயிரையும் பொருட்படுத்தாமல் இரவு பகலாக வேலை பார்த்தோம். குடும்பத்தைக் கூட கவனிக்க முடியவில்லை. அப்போது எங்களைத் தெய்வமாக பார்த்தார்கள். இப்போது குப்பையைவிடக் கேவலமாக தூக்கிப் போடுவது நியாயமா..? எனக் கேள்வி எழுப்புகின்றனர் தூய்மை பணியாளர்கள்.**

சென்னை மாநகராட்சியை சேர்ந்த தூய்மை பணியாளர்கள் கடந்த ஆகஸ்ட் ஒன்றாம் தேதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த போராட்டத்திற்கு மாநகராட்சியில் குடியேறும் போராட்டம் என்று பெயர் வைத்துள்ளனர். எதற்காக இந்த போராட்டம்?

சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் தனியார் மயத்துக்கு ஆதரவாக செயல்படுகிறார். சட்ட விரோதமாக ஆண்டுக் கணக்கில் பணி செய்த தூய்மை பணியாளர்களுக்கு பணி மறுக்கிறார்.

எங்க வாழ்க்கையே போச்சு என்று



தேங்கி கிடக்கும் குப்பைகள்






கலங்கிய தூய்மை பணியாளர்கள். தூய்மை பணியாளர்களின் வழக்கு OP.No: 66 & 67 / 2025 தொழில் தீர்ப்பாய விசாரணையில் நிலுவையில் இருக்கும் போது சட்டத்தை மதிக்காமல் ஆணையர் குமரகுருபரன் பணி மறுப்பு செய்துள்ளார். அதைக் கண்டித்து, சென்னை மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் தொடர் போராட்டத்தில் குதித்துள்ளதாக தூய்மை பணியாளர்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து பேசிய சென்னை மேயர் பிரியா,

மண்டலம் 5, 6 தனியார் மயப் படுத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்பே பல மண்டலங்களில் பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு சிறப்பான முறையில் பணிகள் நடந்து வருகின்றன. மாநகராட்சி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு முழுமையாக பணி பாதுகாப்பு வழங்கப்படும். வரவிருக்கும் நாட்களில் பணிகளை மேற்கொள்ளலாம் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தனியார் ஊழியர்கள் உடன் இணைந்து பணியாற்றலாம். தற்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் இடங்களில் வேறு யாரையும் போடவில்லை. அவர்கள் மீண்டும் வந்து பணியாற்றுவார்கள் என்று தான் காத்திருக்கிறோம்.

சம்பள விவகாரத்தை பொறுத்தவரை இதற்கு முன்பு எவ்வளவு வழங்கப்பட்டதோ, அதேபோல் தான் இருக்கும். கூடுதலாக பி.எப். இன்சூரன்ஸ், குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, பண்டிகை காலங்களில் போனஸ் போன்றவை கூடுதலாக கிடைக்கும். எனவே போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் மீண்டும் மாநகராட்சி உடன் இணைந்து பணி செய்ய வேண்டும் என்றார்.

ஆனால் தூய்மை பணியாளர்களோ,

சென்னையில் மொத்தம் 15 மண்டலங்கள் இருக்கின்றன. இதில் 10 மண்டலங்களில் 2020ஆம் ஆண்டே தனியார் மயம் ஆகிவிட்டது. 2021ஆம் ஆண்டு 7வது மண்டலத்தை தனியார் மயமாக்கும் போது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடை வாங்கினோம். ஆட்சி மாற்றம் வந்தால் தூய்மை பணியாளர்களுக்கு பணி நிரந்தம் உள்ளிட்ட விஷயங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வாக்களித்து வெற்றி பெற வைத்தோம்.

தற்போது 5, 6, 7வது மண்டலத்தில் 3 ஆயிரத்து 500 தூய்மை பணியாளர்கள் இருக்கின்றனர். எங்களுக்கு தினசரி 753 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டும் என்று கடந்த ஆண்டு நீதிமன்றத்தில் தீர்ப்பு கிடைத்தது. அப்போது மாநகராட்சி ஆணையராக இருந்த ராதாகிருஷ்ணன் நீதிமன்ற




சென்னை மாநகராட்சி



மேயர் பிரியா

தீர்ப்பின் படி சம்பளம் கொடுத்து விட்டார். ஆனால் அடுத்த நாளே அவரை மாற்றி விட்டனர்.

அதன்பின் சென்னை மாநகராட்சி ஆணையராக குமரகுருபரன் பதவியேற்றார். அதன் பின்னர், 5, 6, 7வது மண்டலத்தை தனியார் மயமாக்க வேண்டும் என்று மும்முரம் காட்டி வருகின்றனர். தற்போது நாள் ஒன்றுக்கு 753 ரூபாய் வீதம் 23,000 ரூபாய் மாத சம்பளம் வாங்குகிறோம். எங்களுக்கு வார விடுப்பு, தேசிய விடுப்பு, சுதந்திர தினம், குடியரசு தினம், மகப்பேறு விடுப்பு என எதுவும் எங்களுக்கு கிடையாது. அனைத்து நாட்களிலும் வேலை செய்கிறோம்.



மு.க.ஸ்டாலின்

ராம்கி என்ற தனியார் நிறுவனத்தின் கீழ் தூய்மை பணியாளர்கள் வேலை செய்யும் போது பெருக்கும் நபர்களுக்கு 18 ஆயிரம் ரூபாய் தான் சம்பளம் தருகின்றனர். அப்படியெனில் மிச்சம் 5,000 ரூபாயை யார் எடுத்துக் கொண்டு செல்கின்றனர்.

சென்னை மாநகராட்சியில் படிப்படியாக அனைத்து மண்டலங்களையும் தனியார் மயமாக்கம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

கடந்த அ.தி.மு.க ஆட்சியில் 11 மண்டலங்களில் தூய்மைப் பணியை தனியார் நிறுவனங்களிடம் மாநகராட்சி நிர்வாகம் ஒப்படைத்தது. அதனால் தூய்மைப் பணியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் தெரிவித்தார். தி.மு.க ஆட்சி அமைந்த பிறகு தூய்மைப் பணியாளர்களுக்கு நல்ல காலம் ஏற்படும் எனவும் அவர் பேசினார்.

எனவே மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு வந்தால், எங்களைக் கைவிட மாட்டார் என நம்பி உழைத்தோம். ஆனால், கடந்த 31 ஆம் தேதியுடன் எங்களின் நம்பிக்கை வீண்போய்விட்டது என்றனர் தூய்மை பணியாளர்கள்.

மேலும், யாருமே நிரந்தர பணியாளர்கள் இல்லை என்று கூறுகின்றனர். எங்களை சென்னை மாநகராட்சியின் கீழ் பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியார் நிறுவனத்திற்கு தாரை வார்க்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டனர். ■


Owned, Published and Printed by: S.P. RAMANATHAN, at No. 3-224/1, Musuvanuthu, Dindigul, Tamilnadu – 624619. and Printed at CHENNAI OFFSET PRINTERS, No. 19/1,21/2, Kitabathkhan Bahadur Street, Ellis Road, Chennai – 600002. EDITOR: S.P. RAMANATHAN
All rights reserved. Legal jurisdiction Chennai city court only. Nothing in Paraparappu Cheithi is intended to defame any person. But expressed in faith, pursuit of truth and public good.

# தொகுதி மாறும் நயினார் நாகேந்திரன்!

பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவரும், முன்னாள் அமைச்சருமான நயினார் நாகேந்திரன் தற்போது திருநெல்வேலி சட்டமன்ற தொகுதியின் எம்.எல்.ஏ.வாக இருக்கிறார். தொகுதிக்குள் அடிக்கடி விசிட் அடித்து பல நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தொகுதியின் பொதுமக்கள் திருமணத்திற்கு அழைத்தால் தவறாமல் கலந்து கொண்டு வருகிறார். உடனுக்குடன் அதனை சமூக வலைத்தளங்களில் அவரது உதவியாளர் வானமாமலை பதிந்து வருகிறார்.

ஆனால் நெல்லையில் சாதிப்பிரச்னைகளால் தற்போது அவர் கோவில்பட்டியில் போட்டியிடவும் ஆலோசித்து வருகிறார். இதற்காக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கோவில்பட்டி வந்தபோது கூடவே இருந்து மக்களை நோக்கி கும்பிட்டவாறே இருந்தார். நயினார் கோவில்பட்டியில் போட்டியிட்டால் சிட்டிங் எம்.எல்.ஏ. கடம்பூர் ராஜு விளாத்திகுளத்திற்கு மாற்றப்படுவாராம். நெல்லை, கோவில்பட்டியைத் தவிர நாங்குநேரி தொகுதியையும் நயினார் குறி வைத்திருப்பதாகவும் செய்திகள் வருகின்றன.





டிடிவி தினகரன்


நயினார் நாகேந்திரன்


கடம்பூர் ராஜு

# சாத்தூரில் போட்டியிடுகிறார் டி.டி.வி!

அ.ம.மு.க பொதுசெயலாளர் டி.டி.வி. தினகரன் வரும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட மும்முரமாக இருக்கிறார். இதற்காக அவர் தேனி மாவட்டம் ஆண்டிபட்டி, மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம், விருதுநகர் மாவட்டம் சாத்தூர் ஆகிய தொகுதிகளை மனதில் வைத்துள்ளார்.

ஆனால் அ.ம.மு.க விருதுநகர் மாவட்ட செயலாளர் பயில்வான் சந்தோஷ் தலைவர் தினகரன் சாத்தூரில் போட்டியிடுவது உறுதியென்று செயல்வீரர்கள் கூட்டத்தில் அறிவித்து விட்டார்.


சாத்தூர் தொகுதியில் ம.தி.மு.க. வேட்பாளர் ரகுராமன் சொற்ப வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றி பெற்றதால் அதிமுக பிஜேபி கூட்டணி வாக்குகளால் தனது வெற்றி உறுதி என்று டி.டி.வி கணக்கு போட்டு களமிறங்க தயாராகி விட்டார்.

# மயிலாப்பூரை குறி வைக்கும் வைகைசெல்வன்!

கடந்த ஆகஸ்ட் 8 அன்று அதிமுக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி அருப்புக்கோட்டை நகரில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். பிரசாரத்திற்காக விருதுநகரிலிருந்து அருப்புக்கோட்டை வரை 500க்கும் மேற்பட்ட பேனர்களை வைத்து மக்களை முகம் சுளிக்க வைத்து விட்டனர். அதிலும் நாடார் சிவன் கோவில் சந்திப்பில் நாலாபுறமும் கடைகளை மறித்து கட் அவுட் வைத்து கதிகலக்கி விட்டனர்.

ஆனால் அருப்புக்கோட்டை தொகுதியின் முன்னாள் எம்எல்ஏ.வான வைகைசெல்வன் ஒரு கட்அவுட் கூட வைக்கவில்லை. தொகுதி பக்கமும் தலைகாட்டுவதில்லை.

இதனால் அவரே அருப்புக்கோட்டை தொகுதியில் போட்டியிட விரும்பவில்லை என்றே பேசுகிறார்கள். மாறாக, அவர் இம்முறை சென்னை மயிலாப்பூரில் போட்டியிட தயாராகி வருகிறாராம்.


வைகைசெல்வன்


என்.ஆர்.தனபாலன்

# தூத்துக்குடியில் போட்டியிடத் தயாராகும் என்.ஆர்.தனபாலன்!

பெருந்தலைவர் மக்கள் கட்சியின் தலைவராக இருப்பவர் என்.ஆர்.தனபாலன். இவர் நாடார் சமூகத்தை சேர்ந்தவர். இருமுறை பெரம்பூர் தொகுதியில் அதிமுக கூட்டணியில் போட்டியிட்டு தோற்றதால் தற்போது தூத்துக்குடியில் அதிமுக கூட்டணியில் போட்டியிட முடிவுசெய்து எடப்பாடியிடம் பேசி வருகிறாராம்.


இதனால் பெரம்பூர் தொகுதியில் அதிமுக சார்பில் புதுமுக இளைஞரும், வழக்கறிஞருமான ஒருவரை தேர்ந்தெடுத்து போட்டியிட்டு வென்றிட தகுதியான இளைஞரை தேடித்தர தனக்கு வேண்டிய சர்வே டீமிடமும், முன்னாள் உளவுத்துறை அதிகாரிகளிடமும் கூறியிருப்பதால் அதற்கான பணிகள் ஜரூராக நடக்கிறது.





தனுஷ்குமார்


சதன் திருமலைக்குமார்


ராஜேந்திரன்

# கடையநல்லூருக்கு மாறும் ம.தி.மு.க!

தென்காசி எம்.பி.யாக இருந்தவர் தனுஷ்குமார். இவருக்கு எம்.பி.தேர்தலில் சீட் வழங்கப்படவில்லை. ஆனால் இம்முறை சட்டமன்ற தேர்தலில் வாசுதேவநல்லூரில் போட்டியிட விரும்புவதால் மண்டல பொறுப்பாளரான அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆரை சுற்றி வருகிறார்.

தொகுதியின் சிட்டிங் எம்.எல்.ஏ.வாக இருக்கும் மதிமுக பிரமுகர் டாக்டர் சதன் திருமலைக்குமார் மீண்டும் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்திருக்கிறார்.

இதனால் வாசுதேவநல்லூரை காங்கிரஸ்க்கு கொடுக்க திமுக பரிசீலித்து வருகிறது. இதற்கு பதிலாக கடையநல்லூரை கேட்டு வாங்கி டாக்டர் ராஜேந்திரனை ம.தி.மு.க. வேட்பாளராக்க வைகோ ஆலோசித்துள்ளார்.